பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 09 செவ்வாய்க்கிழமை (23.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187

## நயினாதீவு ஆலய விவகாரம்

## விசாரணைக்கு பிரதமர் பணிப்பு



(கொழும்பு)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கோபுர வாசலில் பாதணிகளுடன் பொலிஸார் மற்றும் கடற்படையினர் நடமாடிய விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய சம்பந்தப்பட்ட படையினரிடம் வட பிராந்தியத்துக்கான 23

## மரணச்சடங்கில் வாய்த்தர்க்கம்

## வாள்வெட்டில் முடிந்தது

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இருபாலை மடத்தடி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாய மடைந்துள்ளனர். 23

### – பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் –

# வாக்குறுதியில் இருந்து இலங்கை விலகியுள்ளது

## ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

(பிரசல்ஸ்)

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான வாக்குறுதியில் இருந்து இலங்கை விலகியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.**



ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது மனித உரிமைகள் மற்றும் உலகில் ஜனநாயகம் தொடர்பாக, 2019 வருடாந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'புதிய ஜனாதிபதியும் அவரது இடைக்கால அரசாங்கமும் எடுத்த முக்கியமான கொள்கைத் தீர்மானங்களில் ஒன்று, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில்லை என்பதே ஆகும்.

மேலும் உத்தேச புதிய சட்ட மூலத்தையும் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஜி.எஸ்.பி. சலுகையை பெறு 23

## க.பொ.த (சா/த)

மாணவர்களுக்கான மத்திய மாகாணத்தின்

### கணித பாட மாதிரி வினாத்தாள்

உள்ளே

புளியம்பொக்கணையில் வெட்டுக்காயங்களுடன்

## ஒருவர் மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நேற்றிரவு வெட்டுக் காயங்களுடன் ஒருவர் மீட்கப்பட்டு தருமபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-316)

வவுனியாவில்

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி

(மன்னார்)

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த புகையிரதத்திற்கு முன் பெரியகட்டு 41ஆவது 23

## பலமான அரசாங்கத்தை அமைப்பதே இலக்கு

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(குருநாகல்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை செயற் 23

## விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

### கரணவாயில் சோகம்



(கரணவாய்)

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வடமராட்சி பகுதியில் 23

## மட்டக்களப்பில் நடைபெற்ற வாக்குகள் எண்ணும் ஒத்திகை



(மட்டக்களப்பு)

நடைபெற இருக்கின்ற பொதுத் தேர்தலுக்கான வாக்குகள் எண்ணும் பரீட்சார்த்த ஒத்திகை நிகழ்வு மட்டக்களப்பு 23

## பிளவுபட்ட உலகத்தால் கொரோனா வைரஸை எதிர்கொள்ள முடியாது

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

பிளவுபட்ட உலகத்துடன் நாம் இந்தத் தொற்றுநோயைத் தோற்கடிக்க முடியாது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. 23

## இறக்குமதியை மட்டுப்படுத்தி உற்பத்தியை ஆரம்பியுங்கள்

### தொழிலதிபர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் அத்தியாவசிய மற்ற பொருட்கள் இறக்குமதியை மட்டுப்படுத்தியுள்ளதால் பல துறைகளில் 23

### – ஜனாதிபதி ஆணைக்குழுவில் –

## சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்கத் தடை

(கொழும்பு)

சட்ட வரைபுகளின் 16ஆவது பிரிவின் அடிப்படையில், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் பங்கேற்க முடியாது என்று 23

## பளைப் பகுதியில் வெடிமருந்து மீட்பு

### இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பளைப் பகுதியில் இரண்டரை கிலோ எடையுள்ள சி4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் 23

# வனவளத் திணைக்களத்துக்கு எதிராக வவுனியா மக்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத் திற்குட்பட்ட காஞ்சூரமோட்டை மக்கள் வனவள திணைக்களத்தின் அட்டூழியங்களை கட்டுப்படுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத் திற்குட்பட்ட காஞ்சூரமோட்டைப் பகுதியில் போர்சூழல் காரணமாக 1980, 90 காலப் பகுதியில் இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறு பகுதிகளிற்கு இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் வந்து காடுகளாக கிடக்கும் தமது காணிகளையும், தமது பெற்றோர்கள் வசித்த காணிகளை பிள்ளைகளும் துப்புரவாக்கி தற்காலிகக் கொட்டில்கள் அமைத்து வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த காணிகள் தமக்குரியது என்று வனவள திணைக்களத்தால் நீண்டகாலமாக கூறப்படுவதுடன் மக்கள் மீள்குடியேறுவதிலும், வீடுகளை அமைப்பதற்கும் வனவளத் திணைக்களம் தடையை ஏற்படுத்தி வருகின்றது. காணிகளை துப்புரவாக்கினாலோ அல்லது கட்டுமானப் பணிகளை மேற்கொண்டாலோ கைது செய்வோம் எனவும் மக்களை எச்சரித்து வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்களிற்கும், வனத்துறையினருக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகிறது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டு பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்ட நிலையில் இதுவரை சரியான தீர்வுகள் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் வனவளத் திணைக்களத்தினால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற மக்கள் அனைத்து தரப்பினர் மீதும் நம்பிக்கை இழந்த நிலையில் தமக்கான தீர்வினைக் கோரி நேற்றையதினம் போராட்டத்தில் குதித்துள்ளனர். தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞா-299)

# நீதியான தேர்தலை நடத்தி முடிப்பது மிகவும் சவாலானது - கரு ஜயசூரிய



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் தொற்று ஏற்படாதிருப்பதை உறுதி செய்யும் அதேவேளை, சுதந்திரமானதும் நியாயமானதுமான பொதுத்தேர்தலை நடத்தி முடிப்பதென்பது உண்மையிலேயே மிகவும் சவாலான விடயமாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களை அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றும், தேர்தல் நடைபெறும் அன்றைய தினம் இரவே வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெறாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கும் நிலையிலேயே கரு ஜயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டிருக்கிறார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இம்முறை, தற்போது காணப்படும் சூழ்நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவதென்பது உண்மையிலேயே மிகப் பெரிய சவாலாகும்.

தேர்தல் சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் அதேவேளை, அது கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவுவதற்கான ஓர் வாய்ப்பாக அமையாதிருப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக வளங்கள் தேவைப்படுமாயின், அவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது கட்டாயமாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை 2011 உலகக்கிண்ணத் தொடரில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் பக்கச்சார்பற்ற விரைவான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

எனினும் இவ்விடயத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்தி, தேர்தல் சமயத்தில் இடம்பெறத்தக்க உண்மையான பிரச்சினைகளை புறந் தள்ளிவிடக் கூடாது என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். (ஞா)

# அநுரகுமாரவிடம் இன்று விசாரணை

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு முன்னிலையாகவுள்ளார். இதுதொடர்பாக அநுர குமார தெரிவிக்கையில், தற்போது எமக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு ஊழல், மோசடிக்கு எதிராக போராட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்காக அந்த அழைப்பை நாம் விரும்பி ஏற்றுக் கொள்கின்றோம்" என குறிப்பிட்டார். (ஞா)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஆனந்தசோதி சஞ்சீவன்

பிறப்பு– 1998–04–19 | இறப்பு– 2018–06–16

ஈராண்டு உருண்டோடினாலும் ஆறுமோ எமதுள்ளம்...
உடல் விட்டு எமதுயிர் காற்றினில்
கலந்தாலும் மீளுமோ இந்த ரணம் ...
தரணி கடந்து இறையுள் கலந்தாயோ எம் செல்வமே...
எம்மிடம் நம்பி உன்னைப் பரிசாய் தந்த இறைவனே
எம் கண்களைக் கட்டி பறித்து விட்டானே கொடியவன்...
என்றோ ஒரு நாள் ஏதும் ஒரு வழியில் எம்மிடம் வருவாய்
என்ற நம்பிக்கையில் நாம்......

(3080)

விவேகானந்தா வீதி,
இணுவில் கிழக்கு.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, அக்கா, அத்தான்.


## சுன்னாகத்தில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில்

# கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்ட 24 பேர் நேற்றுப் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் நண்பர்கள் இருவரது பிறந்தநாள் கொண்டாட்டத்தை நடத்திய போது, சட்டவிரோதமாக கூட்டத்தைக் கூட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 26 பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 24 பேரையும் பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

"பிள்ளைகளை செல்லமாக வளர்த்தால் செல்லமாகவே வீட்டில் வைத்திருக்க வேண்டும். வெளியில் குற்றச்செயல்களில் ஈடுபடவிட்டால் நீதிமன்றம் கட்டுக்காவலில் வைக்கவேண்டிய நிலை ஏற்படும்" என்று சந்தேக நபர்களின் பெற்றோருக்கு நீதவான் ஏ.பீற்றர் போல் அறிவுரை வழங்கினார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 15ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கொண்டாட்டம் தொடர்பில் தகவல் அறிந்த யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் பிறந்த நாள் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்றனர். நிகழ்வில் பங்கேற்ற 40இற்கும் மேற்பட்டோரிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அவர்களில் 26 பேரை மட்டும் கைது செய்த பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கில் முற்படுத்தப்பட்ட சிறுவர்கள் இருவரது பெற்றோரையும் அழைத்து அறிவுரை வழங்கிய நீதவான் ஏ.பீற்றர் போல், அவர்கள் இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்தார்.

ஏனைய 24 பேரையும் வரும் ஜூன் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதுடன்,

சந்தேக நபர்கள் 24 பேரையும் நேற்று மன்றில் முற்படுத்த சிறைச்சாலைக்கு உத்தரவிட்டது. அத்துடன், சந்தேக நபர்களின் பெற்றோரை மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டது. இந்த நிலையில் சந்தேக நபர்கள் 24 பேரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களின் பெற்றோரும் மன்றில் முன்னிலையாகினர். பெற்றோருக்கு அறிவுரை வழங்கிய நீதவான் ஏ.பீற்றர் போல், "சந்தேக நபர்கள் 24 பேரையும் தலா 2 லட்சம் ரூபாய் பெறுமதியான ஆள்பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். (ஞா-32)


## PHARMACIST EXTERNAL EXAMINATION COURSE

மருந்தியலாளர் வெளிவாரி பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புக்கள் ஆடி மாத ஆரம்பத்தில் மீண்டும் தொடங்கவுள்ளது. இந்த கற்கை நெறியை பயின்று பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் முதலில் Sri Lanka Medical Council (SLMC) இல் பயிலுநர் மருந்தியலாளராக பதிவு செய்து, இரண்டு வருடங்களின் பின்னர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். SLMC இல் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப் படிவம் 30.06.2020 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், இல. 464, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மருந்தியலாளர் கல்வி மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கல்வித் தகைமைகள்:

- G.C.E ( O/L ) - ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி
- G.C.E. (A/L) - இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி
- வயது எல்லை இல்லை

( 3082 )

மேலதிக தகவலுக்கு : நேரு SIR ( 077 316 4251 )

# என்னை விமர்சிக்க எவருக்கும் அருகதையில்லை உங்கள் கொக்கரிப்பை நிறுத்திக்கொள்ளுங்கள்

## தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கருணா பதில்

(கொழும்பு)

**இந்த நாட்டில் அனைவரும் அறிந்ததும் நிகழ்ந்து நிறைவேறியதுமான விடயங்களையே நான் கூறியிருந்தேன். அவ்வாறிருக்கையில் என்னை விமர்சிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க உட்பட எவருக்கும் அருகதையே இல்லை என்று தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.**



அண்மையில் நாவிதன்வெளியில் இடம்பெற்ற கூட்டத்தின்போது உரையாற்றிய கருணா அம்மான், தான் கொரோனாவை விட பயங்கரமானவர் என்றும் ஆனையிறவில் ஒரே இரவில் இரண்டாயிரம் மூவாயிரம் இராணுவத்தினரை கொலை செய்ததாகவும் கிளிநொச்சியிலும் அவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றதாகவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இக்கருத்திற்கு தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புக்கள் மேலெழுந்திருந்தன. குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க மற்றும் ருவான் விஜயவர்த்தன உட்பட பௌத்த தேரர்களும் கடுமையான கண்டனத்தினை வெளிப்படுத்தியதோடு அவரைக் கைது செய்யுமாறும் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறும் கோரியிருந்தனர்.

இவ்வாறு எதிர்ப்புக்கள் எழுந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் புதிதாக ஒன்றையும் கூறிவிடவில்லை. இந்த நாட்டில் கடந்த காலத்தில் நிகழ்ந்து நிறைவேறிய விடயங்களையே குறிப்பிட்டேன். விடுதலைப்புலிகள் அமைப்பு பலமாக இருந்த காலத்தில் அவ்விதமான சம்பவங்கள் இடம்பெற்றன. அதே போன்று படைகளாலும் விடுதலைப் புலிகளுக்கு பாரிய அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இதனை இலங்கையில் உள்ளவர்களும் சரி உலகத்தில் உள்ளவர்களும் சரி அறிந்து கொண்டுள்ளனர்.

அந்த விடயங்களையே நான் கூறினேன். அதனை தற்போது சிலர் தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தென்னிலங்கை மக்கள் அவ்விடயம் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இதிலிருந்து தென்னிலங்கை மக்கள் எனது கருத்துக்கள் தொடர்பிலான புரிதலைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தற்போது எனது கருத்தினை தூக்கிப்பிடித்துக்கொண்டு கொக்கரித்துக்கொண்டிருப்பவர்கள் தமது தேர்தல் பிரசாரத்திற்கான ஒரு உத்தியாகவே பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு தென்னிலங்கையில் சரிந்து கிடக்கும் வாக்குகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு எனது கருத்துக்களை பயன்படுத்துகின்றார்கள். ஆகவே நான் இதுபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

ஐ.தே.கவே விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்கு அதிகளவில் உதவிகளை வழங்கியிருந்தது என்பதை கூறுவதோடு அதற்கான சாட்சியாக நான் இருப்பதையும் மனதில் நிறுத்திக்கொள்ளுமாறு கூறுகின்றேன்.

அரசியலுக்காகவும் வாக்குகளை பெறவேண்டுமென்பதற்காகவும் வரலாறையும் கடந்த காலத்தினையும் மறந்து சித்துவிளையாட்டுக்களை ஆரம்பிக்க கூடாது என்றும் என்னை விமர்சிப்பதென்ன என்னைப்பற்றி பேசுவதற்கே இவர்களுக்கு அருகதை இல்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இரத்த ஆறு ஓடுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு அமைதி திரும்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை மறந்துபோகக் கூடாது என கருணா தெரிவித்தார். (ஐ-4)

நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
அன்பார்ந்த தமிழ் மக்களே!
நாம் அனைவரும் ஏகமனதாகத் தீர்மானித்து
நீதியரசர்
க.வி.விக்னேஸ்வரன்
தலைமையில்
தமிழ் மக்களுக்கான
நேர்மைமிகு
அரசியல் தலைமையை
உருவாக்குவோம்

6
க.வி.விக்னேஸ்வரன்
உங்கள் வாக்குகளை
மீன் சின்னத்துக்கு
வழங்குங்கள்
X

2
க.அருந்தவபாலன்
(ஓய்வுநிலை அதிபர்)

10
தவச்செல்வம் சிற்பரன்
(Architect மொரட்டுவ பல்கலைக்கழகம்)
தமிழினப்பற்றாளர் அவை
(C-007)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எச்சரிக்கை பாகிஸ்தானிடமிருந்து கிடைக்கவில்லை

### ருவான் விஜயவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானிடமிருந்து எச்சரிக்கை எதுவும் கிடைத்திருக்கவில்லை என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித்திட்டம் குறித்து இலங்கைக்கு பாகிஸ் தான் எச்சரிக்கை விடுத்திருந்ததாக இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாகவே முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் இருந்து மாத்திரமே எமக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து எச்சரிக்கை கிடைத்திருந்ததாக புலனாய்வுப்பிரிவு எனக்குத் தெரிவித்திருந்தது.

எனினும் குறித்த எச்சரிக்கை தொடர்பில் அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் எந்தவொரு பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையின் பல பிரதேசங்களில் நட்சத்திர விடுதிகள் மற்றும் தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# அரசிற்கு ஆதரவாகக் கைகளை உயர்த்தியவர்கள் மக்களின் வாழ்வை உயர்த்த மறந்துவிட்டார்கள்

## கூட்டமைப்பை சாடும் சந்திரகுமார்

(அக்கராயன்)

தமிழ் மக்களால் பல தடவைகள் பல தேர்தல்களில் வழங்கப்பட்ட பலமான பேரம் பேசுகின்ற வாய்ப்புக்களை எல்லாம் வீணடித்துவிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தமிழ் மக்களிடம் பேரம் பேசும் சக்தியை தமக்கு வழங்குமாறு கோருவது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் என யாழ்., கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் சுயேட்சைக் குழுஐந்தில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி அம்பாள்குளத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்ற ஆரம்ப காலத்தில் மக்கள் எதுவுமற்றவர்களாக எதுவும் இல்லாத பிரதேசங்களில் மீள்குடியேறிய போது நாம் அந்த மக்களிடம் அரசியல் செய்யவில்லை. நான் அந்தக் காலத்தில் மக்கள் மத்தியில் அரசியல் செய்திருந்தால் அடுத்த 2015 தேர்தலிலும் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பேன். ஆனால் நான் அக்காலத்தில் மக்களின் அவலத்தில் அரசியல் செய்ய விரும்பவில்லை.

அரசின் பங்காளிகளாக ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டத்திற்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கும் அரசுக்கு சார்பாக கைகளை உயர்த்தியவர்கள் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு மறந்துவிட்டார்கள். மாறாக தங்களின் சொந்த வாழ்க்கையினை பலமாக்கிக்கொண்டார்கள். கடந்த நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற ஆட்சியில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு பேரம் பேசும் சக்தியை வழங்கியிருந்தார்கள். ஆனால் அந்த பேரம் பேசும் சக்தியால் தமிழ் மக்களுக்கு



என்ன நன்மை ஏற்பட்டது? எனக் கேள்வி எழுப்பிய அவர், தமிழ் மக்கள் கடந்த காலங்களை ஒப்பிட்டு நோக்கி சிந்தித்து தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (ஜ-4-35)

# எமது கரங்கள் பலமடைந்தால் மக்களுக்கான தீர்வு கிடைக்கும்

## டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தங்களுடைய எதிர்பார்ப்புக்களை அடைவதற்காக மேற்கொள்ளுகின்ற முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராக மாறி விடக்கூடாது.

எனவே, சரியான தரப்புக்களை மக்கள் அடையாளம் கண்டு கைகோர்த்து பயணிக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பளை கிராமிய கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தேவையான கொள்கை மற்றும் அதனை அடைவதற்கான பொறிமுறை ஈ.பி.டி.பி.கட்சியிடம் மாத்திரமே இருக்கிறது.

ஏனைய கட்சிகளிடம் இலக்கினை அடைவதற்கான பொறிமுறை எதுவும் இல்லை என்பதையே சக கட்சிகளின் கடந்தகால செயற்பாடுகள் வெளிப்படுத்தியுள்ளன. எனவே, மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வீணை சின்னத்திற்கு வாக்களித்து எம்முடைய கரங்களைப் பலப்படுத்துவார்களாயின், அபிவிருத்தி, அன்றாடப் பிரச்சினைகள், அரசியல் தீர்வு போன்ற அனைத்தையும் பெற்றுத்தர முடியும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)







வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா அனுமதிக்கப்பட்ட பக்தர்களின் பங்களிப்புடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எளிமையான முறையில் நேற்று இடம்பெற்றது.

# நண்பன் யார்? எதிரி யார்? என்பதை மக்கள் தீர்மானிப்பர்

## சி.கா.செந்திவேல் காட்டம்



(குப்பிழான்)

கடந்த 72 ஆண்டுகளாக இந்த நாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவே இல்லை. உழைக்கின்ற மக்கள் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர்கள். அவர்கள் தான் சரியான கொள்கையை முன்வைக்கக் கூடியவர்கள். எதிரி யார்? நண்பன் யார்? என்பதைத் தீர்மானிக்கக் கூடியவர்கள் மக்கள் என மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் வேட்பாளரும் மூத்த பொதுவுடைமைவாதியுமான சி.கா. செந்திவேல் தெரிவித்துள்ளார்.

யாழ்.,கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் சுயேட்சைக் குழு-2 இல் போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடும், வேட்பாளர் அறிமுகமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ்.நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம் பெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அரசியல் சூழல் வெகுவாக மாற்றமடைந்துவிட்டது. நாங்கள் இதுவரை காலமும் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கோரவில்லை.

எங்கள் சமூக அமைப்பில் அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பு புறந்தள்ளப்பட்ட மக்களின் குரல்களை ஒரு போதும் முன்னுக்குக்கொண்டு வரத் தமிழ்க் கட்சிகள் தயாரில்லை. எனவேதான் நாங்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கோரி இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

என்னைப் பொறுத்தவரை எனக்குத் தான் வாக்களியுங்கள். என்னைப் பாராளுமன்றம் அனுப்புங்கள் என நான் கேட்கவரவில்லை.

எங்களுடைய பலத்தைக் காட்டி எங்கள் கட்சியின் பிரதிநிதிகள் யாராவது பாராளுமன்றம் செல்லட்டும். பயனுள்ள கருமங்களைச் செய்யட்டும்.

மக்களை இனியும் நீங்கள் ஏமாற்ற முடியாது. பாராளுமன்றத்தின் மூலம் எங்கள் பிரதிநிதித்துவத்தை நாங்களே கையாளுகின்றதொரு நிலையை எதிர்வரும் தேர்தல் மூலம் ஏற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4-18)

# வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களும் கட்டாயம் தகவல் தொழில்நுட்பத்தில் சித்தியடைய வேண்டும் என அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தற்போதுள்ள கல்வி முறையில் பல்கலைக்கழகத்திற்கு வெளியே பயிலும் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பைப் பெறுவதென்பது இலகுவான காரியமல்ல என தெரிவித்துள்ள அவர், தொழிற்சந்தைக்கு தேவையான விதத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்து படித்தவர்கள் உருவாகுவதும் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்த இடைவெளியை நிரப்புவதற்காக புதிய கல்விக் கொள்கைக்கு அமைய எலட்ரோனிக் தொழில்நுட்பம் உட்பட தொழில்நுட்ப பாடங்கள் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கற்றலில் சிரமப்படும் குழந்தைகள்! ஒன்லைன் மூலம் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

ஓட்டிசம் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கான ஒன்லைன் கற்பித்தல் நாளை மறுதினம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை நடைபெறும்.

இதனை இங்கிலாந்திலிருக்கும் நரம்பியல் வளர்ச்சி, நரம்பியல் வளர்ச்சிக் கோளாறுகளுக்குரிய குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர்.கே.புவனேந்திரன் நடத்தவுள்ளார். (4-5-8)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

4ஆம் ஆண்டு
# நினைவலைகள்

## அமரர்.செல்வன் தேவராசா நிறோஜ்



அன்னை மடியில்
20 . 08 . 1999

ஆண்டவன் மடியில்
23 . 06 . 2016

நான்கு ஆண்டுகள் ஆனதய்யா
நான்கு நிமிடங்கள் கனவில் கூட வருவதில்லை
எப்போது வருவாயோ அதுவரை காத்து இருப்போம்.

(3035)

காளி கோவிலடி,
தாவடி வடக்கு.

உன்னை தினம் நினைக்கும்
அப்பா, அம்மா, தம்பி.

# கேள்வி மனுக்கோரல் எதுவுமின்றி மின் உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சரவையின் அனுமதி சட்டவிரோதமானது

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

கேள்வி மனுக்கோரல் எதுவுமின்றி மின்உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை சட்டவிரோத செயற்பாடாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டினார்.

தற்போது நாட்டுக்கு மின் உற்பத்தி நிலையத்தையும் விட கெரவலபிட்டியில் திரவ எரிவாயு மின்நிலையத்தை அமைப்பதே மிக முக்கியமாகும் எனவும், மக்கள் இந்த விடயம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மின்சக்தி தொடர்பில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சட்டதிட்டத்திற்கு புறம்பாக அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது சட்டத்திற்கு புறம்பான செயற்பாடாகும். நாட்டில் மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்படுமாயின் அது அரச கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக போட்டித்தன்மையிலான கேள்வி மனுக்கோரல் இடம்பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு எதுவும் இல்லாமல் அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க லங்கா விஜய நிறுவனத்தின் சி.எம்.பி.சிக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9743)

ரெங்கசாமி கண்டி. அம்பத்தன்ன - 077 112 3471
Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## கிருஷ்ணபிள்ளை செல்வநாயகம்



திதி - அமரபக்க ஷஷ்டி திதி ( 11.07.2020 )

பிறப்பு – 1956.02.27 இறப்பு – 2019.06.23

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப் பொழுதில் எம்மை விட்டகல்வாயென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள்மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்.....
ஒவ்வொரு நொடியிலும் இதயத்தின்
துடிப்பைப் போல உணர்கின்றோம்....
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் - நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்....

(3070)

புதுவளவு, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

தகவல் - குடும்பத்தினர்.

# இராசிபலன்

23.06.2020
ஆனி 09, செவ்வாய்க்கிழமை
துதியை முற்பகல் 11.51 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 2.19 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை
சந்திராஷ்டமம்- மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**ரிஷபம்** — நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — நிலையான வருமானத்திற்கு வழியமைத் துக்கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், தொழில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** — கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, எப்படி நடக்குமேவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், பயணத்தால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், திடீர் பயணமொன்று ஏற்படலாம், பிறரது பொறுப்புக்களையும் எடுத்துச் செய்வதால் மனச்சஞ்சலங்கள் கூடும்.

**கன்னி** — வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பொருளாதார நிலை உயரும், போசன சுகமுண்டு.

**துலாம்** — தேடிச் சென்றவர்கள் நாடிவந்து உதவு வர், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்,போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்** — விட்டுப்போன உறவினர்கள் மீண்டும் வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** — மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மீனம்** — பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது.

# ஏற்படப் போகும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள ஒன்றிணைவோம்

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

உலக வல்லரசுகளின் ஒழுங்கமைப்பையே மாற்றி அமைக்கப் போகும் கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் தாக்கத்தின் விளைவுகள் இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கப் போவதற்கான சாத்தியக் கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன. இந்த நிலையில் எமது பிரதேச பொருளாதாரமும் ஒரு பாரிய நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் இருக்கும் எமது பொருளாதாரத்தை தக்க வைத்து மேம்படுத்தும் திட்டமிடல்களை செய்யத்தவறின் வறுமையும் பட்டினியும் எமைச் சூழும் அபாயம் இருக்கிறது. இது எமது கல்வி, சுகாதார, அரசியல் ஸ்திரத்தன்மையிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் சாத்தியம் இருக்கிறது.

எமது பிரதேசத்தின் பொருளாதாரத் திட்டமிடல் சம்பந்தமான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பமாகி இருக்கின்றன. பல துறைசார் வல்லுனர்களும் இது சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நிலம் மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் தக்கவைக்கும் ஒரு முக்கிய உற்பத்திச் சாதனமாக அமைகின்றது. இலங்கையின் முழுநிலப்பரப்பு 6.56 மில்லியன் ஹெக்டேயர்கள் ஆகும். இதிலே 82% சதவீதமான நிலங்கள் அரசுடைமை நிலங்களாகும். இந்த அரச நிலத்தில் 37% சதவீதமானவை மட்டுப்படுத்தப்பட்ட உரிமை ஆவணங்களினூடாக சிறு விவசாயிகளுக்கும் கிராம விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கும் பங்கிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறு விவசாயிகளுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டிருக்கும் அரச காணிகளின் அளவு வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன் இப்பகுதிகளில் இராணுவம் பொதுமக்களின் நிலங்களை சுவீகரித்திருப்பதும் நிலமற்றோர் பலர் இருந்தும் இப்பகுதி மக்களுக்கான குடியேற்றத் திட்டங்கள் போதுமான அளவு நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும் கவலை தருவதாக அமைவதுடன் பொருளாதார மேம்பாட்டிற்கும் தடைக்கல் லாய் அமைகிறது.

அத்துடன் இந்தப்பகுதிகளில் சில காணிகளை பௌத்த புனித பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியும் வன இலாகாவிற்கு சொந்தமானது என வகைப்படுத்தியும் மகாவலி திட்டத்திற்கு உரியது என வரையறுத்தும் இருப்பதால் இந்தக்காணிகளை மக்கள் வாழ்வாதாரத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

தொடர்ந்து நீடிக்க இருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கும் வேலை இழப்பு, வருவாய்க் குறைவு, புலம்பெயர் தேசங்களிலிருந்து கிடைத்து வந்த வருவாயில் ஏற்படப்போகும் தாக்கங்கள், செலவின அதிகரிப்பு போன்றவை தற்பொழுது எம்முன்னே திடீரென்று எழுந்திருக்கும் சவால்கள் எனக் கொள்ள முடியும்.

இவ்வாறான புறச்சூழ் நிலைகளை கருத்திற் கொண்டு தேர்தல் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொது நோக்கத்திற்காக ஒன்றுபட்ட திட்டமிடுதல்களில் ஒன்றுபடுவது காலத்தின் தேவையாக அமைகிறது.

எழுந்துவரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குறுகியகால உபாயங்களாக ஆடம்பர செலவுகளைக் குறைத்தல், குடிவகைப்பாவனை, புகைத்தல் என்பவற்றை நிறுத்துதல், உள்ளூர் உற்பத்தி முயற்சிகளையும் அதன் பாவனையையும் மேம்படுத்தல், தனிநபர்களோ குழுக்களோ பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பிக்கும் போது நன்கு திட்டமிடுதலும் துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெறுதலும் பயன்படுத்தப்படாதிருக்கும் நிலங்களில் உற்பத்தி முயற்சிகளை ஆரம்பித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதற்கான நீண்டகாலத் திட்டமிடல் பற்றி சிந்திக்கும் பொழுது எம்மைச் சூழவுள்ள வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகத் தென்படுகிறது. அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புப் பெற வேண்டிய தேவை எழுந்திருக்கிறது

எமது கல்விமுறை உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட எமது தேவைகளைப் பாரம்பரியங்களை கொண்ட ஒரு கல்வி முறையாக அமையவில்லை.

இவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பயிற்சியும் கல்வியும் ஒருங்கிணைந்த ஒரு கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவையைப் பல துறைசார் வல்லுநர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

பாடசாலைக் கல்வியும் பல்கலைக் கழக கல்வியும் தொழிற் பயிற்சி மையங்களுடன் இணைந்த தான ஒரு கல்வித் திட்டத்தை கொண்டதாக அமைய வேண்டும் என்று பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

எந்தத் தொழில் செய்பவரும் அதிலே பயிற்சி பெற்றவராக இருப்பது அவசியமாகிறது. இதுவே தரமான சேவையையும் உற்பத்தியையும் உறுதி செய்து சந்தைப் போட்டிகளை வெற்றி கொண்டு ஸ்திரமான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக் அமையும். விவசாய கால்நடை மீன்பிடி சம்பந்தமான அறிவியல் தொழிற் பயிற்சி கற்கை நெறிகள் மேம்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

எமது கல்விமுறை எமது தேவைகள் வளங்கள் நோக்கியதாக அமையாததாலும் உள்ளூர் உற்பத்திக்கான பாரிய முதலீடுகள் ஏதும் ஏற்படுத்தப்படாத காரணத்தாலும் உள்ளூர் தொழில் வாய்ப்புக்கள் குறைந்து போக பலர் வெளிநாடு நோக்கி இடம் பெயர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

1987 இல் இலங்கை யாப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆம் திருத்தத்திற்கு பின்பும் இன்றுவரை மத்திய அரசே அரச காணிகளின் கட்டுப்பாட்டில் மேலாதிக்கம் கொண்டுள்ள நிலை காணப்படுகிறது. அத்துடன் கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளில் கூட மத்திய அரசின் கட்டுப்பாடுகள் மேலோங்கி காணப்படுகின்றன. இத்தகைய புறச்சூழலில் நாம் எமது பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் சம்பந்தமான தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றங்கள் பயனுடையதாக அமையும். முயற்சியாளர்களுக்கு தேவையான நில ஒதுக்கீடு, அவர்களுக்கான பயிற்சியும் வழிகாட்டலும், பொருளாதார உட்கட்டுமானங்களை மேம்படுத்துதல் சிறிய தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தல், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமான உங்கள் கருத்துக்களை தமிழ் மக்கள் பேரவை எதிர்பார்த்து நிற்கிறது. உங்கள் அபிப்பிராயங்களை (tpcmediasl@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிஉதவுமாறு உங்களை அன்புடன் கேட்டு நிற்பதோடு நாம் தேர்தல் அரசியல் கடந்து எமது இலக்கினை நோக்கி ஒன்றிணைந்து பயணிக்க அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

# அங்கு ஜனாதிபதி பிறந்தநாள் கொண்டாடுகிறார் இங்கு இளைஞன் சூட்டில் பலியாகியாகிறான்

## கிளாலி சூட்டுச் சம்பவத்திற்கு சிவாஜிலிங்கம் கண்டனம்

(குப்பிழான்)

**கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 71 ஆவது பிறந்த தினத்தை மிகப்பெரியளவில் கொண்டாடிக் கொண்டிருந்த நிலையில் எங்களுடைய தாயகத்தில் மிகப் பெரிய துயரமான சம்பவம் கோரமான முறையில் அரங்கேற்றப்பட்டுள்ளது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்., கிளிநொச்சி தேர்தல் தொகுதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**




முகமாலையில் கிளாலி கெற்பேலிப் பகுதியில் மண் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் உழவியந்திரம் மீது இராணுவத்தினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதன் போது திரவியம் இராமகிருஷ்ணன் என்ற கெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த இளைஞனின் தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு உயிரிழந்துள்ளார். முகமாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஜனாதிபதிக்கு இராணுவத்தினர் கொடுத்த பிறந்தநாள் பரிசா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள தமிழ்த்தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டிலும் இதே போன்று பருத்தித்துறை குடத்தனை மணற்காட்டுப் பகுதியில் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுச் சிறைகளில் வாடினார்கள். இத்தகைய நடவடிக்கைகள் படையினரின், பொலிஸாரின் கோர முகத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

குற்றச் செயல்களை அனுமதியுங்களென நாங்கள் கேட்கவில்லை. சட்டவிரோதமாக மண் கடத்தல் நடைபெறுகிறது என்றால் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்னால் நிறுத்துங்கள். இதைவிடுத்து வெறித்தனமாகத் தலைக்குச் சுட்டுக் கொல்வது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. இத்தகைய வெறித்தனமான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் எமது இளம் சமுதாயம் இந்த அடக்கு முறைகளுக்கு எதிராக கொதித்தெழுந்து வீதிகளில் போராடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இதுபோன்ற கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை நடத்துபவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முற்படக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4-18)

# படகு கவிழ்ந்து விபத்து

## பத்துப்பேர் மாயம்

## 6 பேர் உயிருடன் மீட்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 10 பேரை காணவில்லை. இந்தோனோசியாவில் கிரகடாவ் எரிமலைக்கு அருகேயுள்ள ரகட்டா தீவில் இருந்து கே.எம்.புஸ்பிட்டா ஜெயா என்ற படகு புறப்பட்டு சென்றது. இதில் மொத்தம் 16 பேர் பயணம் செய்தனர்.

இந்தப் படகு எதிர்பாராத வகையில் இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள சுந்தா ஜலசந்தியில் சென்று கொண்டிருந்த போது



கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இது குறித்த தகவல் அறிந்ததும் தேசிய தேடல் மற்றும் மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இன்னும் 10 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. (ஜ-2)

# 892 வீதி விபத்துக்களில் 936 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இவ் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற 892 வாகன விபத்துக்கள் மூலம் 936 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 9 ஆயிரம் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இரண்டாயிரத்து 278 அபாயகரமான விபத்துக்களாகவும் மூவாயிரத்து 573 சிறுவிபத்துக்களாகவும் இரண்டாயிரத்து 188 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை அதிவேக விபத்துக்கள் 435 பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப்பத்திரமின்றி பயணித்த 15 ஆயிரத்து 478 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஜ-8)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அவிட்டம் செவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BPE, PT Coach<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், அரச உத்தியோகம்<br>தொ.இ: B/10837 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 16 3/4 செவ் 4 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND IT, B.Com, B.Sc. வங்கியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உயர் உத்தியோகம்<br>தொ.இ: G/10870 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 19 1/2 செவ் 9 இல் உயரம்:177cm<br>தகைமை/தொழில்: Diploma in Auto mobile வடமாகாண பிராந்திய முகாமையாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், உத்தியோகம் உள்ளவர்கள்<br>தொ.இ: B/10838 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: - செவ் 3 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/10872 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்: Following Nursing Building Contractor<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/10839 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: செவ் 6 இல் உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உயர் உத்தியோகம்<br>தொ.இ: G/10877 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: செவ் 6 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. விற்பனை முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10842 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 4 செவ் 2 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: M.L.T.இறுதி ஆண்டு<br>எதிர்பார்ப்பு: Engineer உள்நாடு<br>தொ.இ: [illegible]/10881 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வெடிமருந்து திருடியவர்களை தேடும் பளைப் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

பளை பகுதியில் இரண்டு கிலோ 500 கிராம் எடையுள்ள சி-4 வெடிமருந்து இராணுவத்தால் நேற்று திங்கட்கிழமை அதிகாலை மீட்கப்பட்டது.

பளை பகுதியிலுள்ள மிதிவெடி அகற்றும் நிறுவனத்திற்குள் புகுந்த இருவர் அங்கிருந்த வெடி மருந்துகளைத் திருடிக் கொண்டு வெளியில் சென்றபோது நிறுவனத்தின் காவலாளியைக் கண்டவுடன் வெடிமருந்து மூடையைப் போட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் தகவல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த இராணுவத்தினர் சோதனையிட்டனர். அப்போது குறித்த மூடைக்குள் இருந்து இரண்டரை கிலோ சி-4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளது. இராணுவம் மற்றும் பொலிஸார் அவ்விரு சந்தேக நபர்களையும் தேடும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ஜ-8)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சியின் ஸ்தாபக தலைவர் தோழர் கே.பத்மநாபா மற்றும் போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் 30 ஆம் ஆண்டு நினைவு தினமான "தியாகிகள் தினம்" நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னாரில் நினைவுகூரப்பட்டது.

மன்னாரில் உள்ள ஈ.பி.ஆர்.எல். எப்.அமைப்பின் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண முன்னாள் அமைச்சர் ஞானசீலன் குணசீலன் மற்றும் மன்னார் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மன், கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# இந்து இளைஞர் அணி வெற்றி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் மேற்கு உதயநிலா விளையாட்டுக் கழகத்தினால் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வந்தது. குறித்த சுற்றுத் தொடரின் இறுதிச்சுற்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த சுற்றுத்தொடர் உதயநிலா விளையாட்டுக்கழக மைதானத்திலேயே நடைபெற்றது. இறுதிப் போட்டியில் இந்து இளைஞர் அணியினர் மற்றும் சுப்பர் 7 அணியினருக்கிடையில் பலப்பரீட்சை நடைபெற்றது. இறுதியில் இந்து இளைஞர் அணியினர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

வெற்றி பெற்ற அணியினருக்கான பரிசில்களை கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சிவஞானசுந்தரமூர்த்தி, வடக்கு மாகாண now wow அமைப்பின் இணைப்பாளர் ஞானம், வவுனியா மாவட்ட நடுவர் சங்கத்தைச் சேர்ந்த நடுவர்களான பிரேம் மற்றும் நிரோஜன், உதயநிலா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் கேசவன், கழகத்தின் அமைப்பாளர் நிரோசாந் ஆகியோர் வழங்கி வைத்தனர்.(5)

# வாகனம் திருத்துமிடத்தில்

## மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை



(நெளுக்குளம்)

வவுனியா கற்குளம் பகுதியில் உள்ள வாகனம் திருத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 6 மோட்டார் சைக்கிள்கள் விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை கற்குளம் பகுதி வாகனம் திருத்துமிடத்தில் பழுதுபார்ப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்களே விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாக உரிமையாளரினால் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(4-5-299)

# ஆன்மீகம்

## முகம் வேறு; அகம் வேறு!

(நேற்றைய தொடர்ச்சி)

இதோ! இன்னொரு பட்டியலில் இணைய வரகவியே நம்மை வரவேற்கிறார்.

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா

உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா

களிபடைத்த மொழியினாய் வா வா வா

கடுமை கொண்ட தோளினாய் வா வா வா

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா

சிறுமைகண்டு பொங்குவோம் வா வா வா

உருவத்தால் நாம் மனிதர்களாகக் காணப்பட்டால் போதுமா? ராமலிங்க அடிகளார் வாழ்வில் நடந்த ஒரு சம்பவ த்தைப் பார்ப்போம்.

சென்னை ஏழு கிணறு பகுதியில் அண்ணன், அண்ணியார் அரவணைப்பில் இளமையில் வாழ்ந்துவந்தார் ராமலிங்கர். தினம் திருவெற்றியூர் சென்று வழிபடுவதை தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். திருவெற்றியூரின் தேரடித்தெருவில் நெடு நாட்களாக வாழ்ந்து வந்தார் நிர்வாண சாமியார் ஒருவர்.

அந்தத் தெருவில் அப்படியும் இப்படியுமாகச் சென்று வருபவர்களைத் திண்ணையில் அமர்ந்தபடி தீர்க்கமாய்ப் பார்ப்பார் அந்தத் துறவி.

புலி போகிறது, பூனை போகிறது, கழுகு போகிறது, கழுதை போகிறது என ஆய்வு செய்து சொல்வார் அம்மணத்துறவி. அவரவர் குணங்களுக்கு அவர் தரும் பட்டம் அது. ஒரு பகல் நேரத்தில் கையில் விளக்கை ஏந்தியபடி கிரேக்க நாட்டில் டயோனியல் என்ற ஞானி மனிதனைத் தேடினார் என்று சொல்வதுண்டு. திருவெற்றியூரில் திரும்பவும் அது நிர்வாண சாமியார் மூலம் நிகழ்ந்தது போலும் தினசரி தெற்கு மாடவீதி மூலம் திருவெற்றியூர் ஆலய வழிபாட்டிற்குச் செல்லும் வள்ளலார் அன்று மட்டும் நேரடியாகத் தேரடிவீதி மூலம் சீரடி பெயர்த்தார்.

அடிகளைக் கண்டதும் நிர்வாண சாமியார் 'இதோ ஓர் உத்தம மனிதன் போகின்றான்' எனச் சத்தமிட்டார். தன் இருகைகளையும் அம்மணத்திற்கு ஆடையாக்கினார். சாமியார் தன் நிர்வாண கோலத்தை நீக்கி கைகளால் பொத்திக் கொண்டது ஏன் தெரியுமா?

இதுவரை அவர் பார்த்ததெல்லாம் மனித வடிவில் விலங்குகளைத்தானே! அதனால் விலங்குகள் முன்னே எப்படி இருந்தால் என்ன என்று நினைத்தார். இப்போது மனிதனைக் கண்டோம். அதுவும் உத்தமமான மனிதனைக் கண்டோம். மனிதன் முன்னே மானத்தைக் காக்கத்தானே வேண்டும். அதனால் உடை தேவையென கரங்களால் உடனே மறைத்தார். கிரேக்க ஞானிக்கு கிடைக்கவில்லை மனிதன். ஆனால் நம்நாட்டு திருவெற்றியூர் சாமியாரோ தெய்வ மனிதனைக் கண்டார். படிப்பிலோ, பதவியிலோ, பணத்திலோ, பகட்டிலோ மனிதன் மதிக்கப்படுவது இல்லை. பண்புகளின் சங்கமமாக இருந்தால்தான் அவன் போற்றப்படுகிறான். நல்லவற்றின் நடுவே நான் என்னைச் சுற்றி நல்லவை எனச் சூழலை அமைத்துக்கொள்பவன் தான் சுடர் விடுகின்றான்.

அற்புதமாக ஓவியம் தீட்டும் கலைஞன் ஒருவனுக்கு இயேசுநாதரையும் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசையும் படமாக வரைய வேண்டும் என்று ஆசை. தத்ரூபமாக சித்திரம் அமைய வேண்டும் என்கிற தணியாத ஆசை. இயேசுவை வரைவதற்காக தெய்வாம்சம் பொருந்திய ஒருவனைத் தேடினான். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனைப் பார்த்தான். அவனுடைய சாந்தமான முகமும் கருணை மிதக்கும் கண்களும் ஓவியனுக்கு இயேசுநாதரை நினைவுபடுத்தியது. உடனே அவனையே மாதிரியாகக் கொண்டு மகான் உருவத்தை வரைந்து முடித்தான். பின்னர் யூதாஸ் படத்தை வரைவதற்காகப் பொருத்தமான நபர் ஒருவரைத் தேடினான். பல வருடங்கள் ஓடி விட்டன. பிறகுதான் அவன் தேடி அலைந்த படி கொடூரம் கொப்பளிக்கும் முகம் கொண்டவன் ஒருவன் அவன் கண்ணில் பட்டான். யூதாசை வரைய இவனையே மாதிரியாகக் கொள்ளலாம் என்று முடிவு செய்து அவனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். ஏற்கனவே தான் வரைந்திருந்த இயேசு கிறிஸ்துவின் ஓவியத்தை யும் காட்டினான். ஓவியத்தை கண்ட அவனோ ஓவென்று கதறி அழுதான். பதறிப்போன ஓவியன் 'ஏன் அழுகிறாய்?' எனக் கேட்டான்.

'ஐயா! இயேசுநாதரை நீங்கள் சித்திரமாக வரைய மாதிரியாக நின்ற அதே இளைஞன்தான் நான். அப்போது என் மனதில் எந்தத் தீய எண்ணமும் இல்லை.

தெய்வாம்சம் பொருந்தியவனாகத் தெரிந்தேன். காலச் சுழற்சியில் பல்வேறு ஆசைகளாலும் தீயவர்கள் பழக்கத்தாலும் என் எண்ணங்கள் திசைமாறின. அப்போது உங்களுக்கு இயேசு கிறிஸ்துவாகத் தெரிந்தவன் இப்போது யூதாசாக உருமாறி விட்டேன்' என்றான்.

உயர்திணையாகப் பிறப்பெடுத்தோர் அஃறிணையாக மாறிவிடலாமா?



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

04

## கலாநிதி முருகர் குணசிங்கம்

### இந்தியர்களின் புலம்பெயர்வு

பலநூறு ஆண்டுகளாக இந்திய மக்களும் புலம்பெயர்ந்து வருகின்றனர். இந்தியர்கள் உலகின் பல பகுதிகளில் வாழ்ந்து வருவதற்கும் இன்றைக்கும் அவர்கள் அலையலையாக வெளியேறிச் செல்வதற்கும் பலவிதமான காரணங்கள் இருக்கின்றன. வணிகத் துறையில் பின்பற்றப்பட்ட அடிமை முறை குடியேற்ற நாடாக இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட உத்தரவாதம் இல்லாத தொழிலாளர் அமைப்பு விடுதலை பெற்றதன் பின்னர் வெளிநாடுகளுக்கு விரும்பிச் சென்று பணிபுரிவது ஆகியவை அவற்றுள் சில.

இன்று இந்திய மக்கள் நாட்டின் எல்லைகளைத் தாண்டிப் பணிபுரியச் செல்வதற்கு உலகமயமாக்கல் உந்து சக்தியாக அமைகின்றது. நண்பர்களும் உறவினர்களும் பல நாடுகளில் வாழ்ந்து வருவதோடு உலகளாவிய வணிகத்தொடர்புகள் அமைந்து இருப்பதும் இதனை ஊக்குவிக்கின்றது. இந்தத் தொடர்புகள் நெருக்கமானவை. இருதரப்பினருக்கும் நலம் பயப்பவை. கலாசாரத்திலும் சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள இவை உதவுகின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதை அடுத்த சில ஆண்டுகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேற்றப்படுவதையும் இனத்தின் பெயரால் இரத்தம் சிந்தப்படுவதையும் கொடுமையான இனப்போராட்டங்களையும் உலகம் கண்டது. எங்கு பார்த்தாலும் பிரிவினைகள், சண்டைகள், கலவரங்கள் நிகழ்ந்தன. செயற்கையாகத் தீட்டப்பட்ட எல்லைக் கோடுகள் சமுதாயங்களுக்கு இடையில் பகை வளர வழிவகுத்தன.


1947 ஆம் ஆண்டு இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு "இந்தியா, பாகிஸ்தான்" என்ற இரண்டு நாடுகள் உருவான போது முஸ்லிம்கள், சீக்கியர்கள், பஞ்சாபியர்கள், வங்காளிகள் என ஒன்றரைக்கோடி மக்கள் புதிதாக வகுக்கப்பட்ட எல்லைக் கோடுகளைத் தாண்டி அப்பால் செல்லுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

தற்காலத்தில் இந்தியாவில் இருந்து வெளிநாடு செல்லுவோர் இரண்டு வகையினர். உயர்ந்த படிப்புப் படித்து மூன்று, நான்கு பட்டங்களைப் பெற்றுக்கொண்டு தொழில்களைத் தேடிச் செல்வோர், உயர் கல்விக்குச் செல்லும் மாணவர்கள் ஆகியோர் முதல் வகையினர். இவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகள், இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய முன்னேறிய நாடுகளுக்குச் செல்கின்றனர். இந்தியா விடுதலை பெற்ற உடனேயே இப்படி வளம் தேடிச் செல்லும் வழக்கம் தொடங்கிவிட்டது என்றாலும் 1990களில் தகவல் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குப் பின்னர் முன்னேறிய நாடுகளுக்குப் புலம்பெயர்வோர் தொகை பன்மடங்கு உயர்ந்து விட்டது.

இன்னொரு வகையினர் கைத்திறன் உள்ளவர்களும் தொழிலாளர்களும் ஆவர். வளைகுடா நாடுகளில் எண்ணெய் இருப்பு கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அந்த நாடுகளை நோக்கியும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் இவர்கள் புலம்பெயர்ந்து செல்லத் தொடங்கினார்கள். அவர்களுள் பெரும்பான்மையோர் கேரளம், தமிழ் நாட்டில் இருந்தும் மற்றைய தென் மாநிலங்களில் இருந்தும் செல்கின்றார்கள். அண்மைக்காலத்தில் உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் மேற்கண்ட நாடுகளை நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டார்கள்.

இந்தியாவில் இருந்து புலம் பெயர்வோர் பொருள் தேடிச் செல்லுகின்ற தனி மனிதர்கள்தாம். அவர்களுள் அகதிகள் எவரும் இல்லை. இவர்கள் முதலாளித்துவ "ஈர்ப்புக்" காரணிகளாலும் "வெளியே" தள்ளும் காரணிகளாலும் புலம் பெயர்ந்து செல்பவர்கள். இவை உள்ளூர்க் காரணிகளாவோ பிரதேசக் காரணிகளாகவோ தேசியக் காரணிகளாகவோ உலகப் பொருளாதாரக் காரணிகளாகவோ இருக்கலாம். வெளியே தள்ளும் காரணிகள் பொருளாதாரப் பின்னடைவு, வேலையின்மை, வளங்கள் பற்றாக்குறை, வறுமை, பஞ்சம் போன்றவை ஆகும்.

ஏற்றுக் கொள்ளும் நாடுகளின் பொருளாதார வளம், தொழிலாளர் பற்றாக் குறை, திறன்வாய்ந்த பணியாளர்களுக்கான தேவை ஏற்படுவது, சேவைப் பணியாளர்களுக்கான தேவை ஏற்படுவது ஆகியவை ஈர்ப்புக் காரணிகள்



ஆகும். 1970 இற்குப் பின்னர் உலகமய முதலாளிகளின் உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. பன்னாட்டுத் தொழில் கழகங்கள் சொந்த நாடுகளில் உற்பத்தி செய்வதை விடுத்து வளரும் நாடுகளில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற இலவச வணிக மண்டலங்களில் தங்கள் தொழில் கூடங்களை அமைக்கத் தொடங்கிவிட்டார்கள். இதன் காரணமாக உற்பத்தி தொடர்பான பணிகளுக்கான புலம்பெயரும் போக்கு குறைந்து விட்டதையும் காண முடிகிறது.

அண்மைக் காலத்தில் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைப் பிரிவு திரட்டிய தகவல்களின்படி உலக மக்களுள் மூன்று விழுக்காடினர். சுமார் 20 கோடி மக்கள் உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் பணி புரிந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள் எனத் தெரிய வருகின்றது.

இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்து சென்று இருப்பவர்களின் தொகை உலகத்திலேயே இரண்டாவதாக உள்ளது எனக் கணக்கிட்டு இருக்கின்றார்கள். சுமார் 2.5 கோடி இந்தியர்கள் 150 இற்கும் மேலான நாடுகளில் வசிக்கின்றார்கள். எனினும் அவர்கள் பெருத்த எண்ணிக்கையில் வாழ்வது மத்திய கிழக்கு, ஐக்கிய அமெரிக்க நாடுகள், மலேசியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில்தான்.

இந்தியாவில் இருந்து புலம்பெயர்வோர் தாங்கள் வாழும் நாடுகளின் மேம்பாட்டுக்கு இணையற்ற பங்களிப்பைச் செய்து உலகமெங்கும் நன்மதிப்பை ஈட்டி வருகின்றார்கள். அத்துடன் இந்தியாவின் இன்றியமையாத பிரச்சினைகளுக்குத் தாங்கள் வாழும் நாடுகளில் ஆதரவு திரட்டுவதில் முனைப்போடு இருக்கின்றார்கள். தங்கள் மத நம்பிக்கைகளையும் மொழிகளையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்து அந்த நாடுகளில் பரப்பவும் செய்கின்றார்கள். மேலும் இந்தியாவில் இருக்கும் தங்கள் குடும்பத்திற்கும் சுற்றத்தினருக்கும் பல விதங்களில் பொருள் உதவி புரிந்து வருகின்றார்கள். அதனால் இந்தியாவின் வெளிநாட்டு வருமானம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது.

### சீனர்களின் புலம்பெயர்வுகள்

சீன மக்கள் பதினான்காம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கி விட்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புலம்பெயர்ந்து செல்வோர் தொகை அதிகரிக்கத் தொடங்கி விட்டது. தங்கள் நாட்டின் மக்கள் தொகையின் அபரிமிதமான பெருக்கம் அடுத்தடுத்து வந்த பஞ்சம், அரசியலில் நிலையற்ற தன்மை ஆகியவையும் வெளிநாட்டின் சிறப்பான வாழ்க்கையும் அதிகரித்த வாய்ப்புகளும் அவர்கள் புலம்பெயர்ந்து செல்லக் காரணங்களாயின. வெளிநாடுகளில் வாழும் சீன மக்கள் தொகை வளர்ச்சி கடந்த ஐம்பது ஆண்டுகளில் சீராக இருந்து வருகின்றது.

தாய்வானில் இருந்து செயற்படும் கடல் கடந்த சீன விவகாரங்களின் குழு **(Overseas Chinese Affairs Commission, Taiwan)** அளித்துள்ள புள்ளிவிபரங்கள் வெளிநாடுகளில் வாழும் சீனர்களின் மக்கள்தொகை பற்றித் தெரிவிப்பதாவது,

1948 இல் 87 இலட்சம், 1968 இல் 180 இலட்சத்திற்கு மேல், 1988 தொடக்கத்தில் 3 கோடி, 1988 இறுதியில் 3 கோடி 40 இலட்சம் எனக் குறிப்பிட்டுள்ளது.

"வெளிநாடுகளில் வாழும் சீன மக்கள்" என்ற 2002 ஆம் ஆண்டின் அறிக்கை 3 கோடி 40 இலட்சம் சீனர்கள் பின்வரும் விகிதத்தில் பரவி இருப்பதாகத் தெரிவிக்கின்றது. ஆசியாவில் **80%**, வட, தென் அமெரிக்கக் கண்டங்களில் **15%**, ஐரோப்பாவில் **2.8%**, அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் **1.7%**, ஆபிரிக்காவில் **0.4%**.

### குடியேற்ற நாடுகளுக்குப் பெயர்ந்து சென்ற ஐரோப்பியர்கள்

ஐரோப்பியக் குடியேற்ற நாடுகளின் பேரரசுகள் உன்னத நிலையில் விளங்கிய பதினாறாம் நூற்றாண்டு முதல் ஸ்பெயின், போர்த்துக்கல், பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து முதலிய நாடுகளில் இருந்து பலர் வெளியேறி தங்கள் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வெல்வேறு மூலைகளில் தென் ஆபிரிக்கா, சிம்பாவே, பிரேஸில், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மெக்சிகோ, கரீபியன் தீவுகள் என்று தொடங்கி தென் அமெரிக்க, வட அமெரிக்கப் பகுதிகளிலும் பரவலாக வாழத் தொடங்கினார்கள்.

ஐரோப்பியக் குடியேற்றம் ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலும் அமெரிக்கக் கண்டங்களிலும் விரிவுற்றதால் குறிப்பிடத்தக்க அளவிற்குப் புலம்பெயர்தல் நிகழ்ந்தது. பின்னர் விடுதலைப் போராட்டங்களின் விளைவாக காலனி ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. இதன்பின்னர் காலனி ஆதிக்க நாடுகளின் பெரு நகரங்களை நோக்கி குடியேற்ற நாடுகளின் தனி நபர்கள் பெயர்ந்து செல்லும் வழக்கம் ஏற்பட்டது. வட அமெரிக்காவின் ரொறன்ரோ, மொன்றியால், நியூயோர்க், சான் பிரான்சிஸ்கோ, சிகாகோ, அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி, மெல்போர்ன், ஆசிய-பசுபிக் பகுதிகளில் ஹொங்கொங், சிங்கப்பூர் முதலிய நகரங்களை நோக்கி இவர்கள் சென்றார்கள்.

இவை யாவும் இரண்டாம் உலகப் போருக்குப்பின் செழித்து வளர்ந்து வருகின்ற உலக முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியில் பங்குகொண்ட நகரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் இதுபோன்ற காலனி ஆதிக்கத்திற்குப் பிந்திய புலம் பெயர்வுகள் பெருமளவிற்கு நிகழ்கின்றன.

ஆதிக்கத்தினை எதிர்த்த போராட்டங்களின் விளைவாக இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற நிலையில் குடியேற்ற நாடுகள் விடுதலை பெற்றன. அந்த நாடுகளில் இருந்து கல்வி, பொருளாதார, குடியமர்வு உரிமைகளை நாடித் தங்களை ஆண்ட நாடுகளில் உள்ள லண்டன், பிரசல்ஸ், பாரிஸ், ஆம்ஸ்டர்டாம், பெர்லின், ரோம் முதலிய நகரங்களை நோக்கிச் செல்லும் வழக்கம் அதிகரித்து வருகின்றது.

### இருபதாம் நூற்றாண்டில் புலம்பெயர்வு

அமெரிக்க-ரஷ்யப் பனிப்போர் வலுஇழக்கத் தொடங்கிய 1980களில் இருந்து அபரிமிதப் பொருள் குவிப்பு, அளவு கடந்த தேசியப் பற்றாக்குறை, மிதமிஞ்சிய அணுவாயுதத் தயாரிப்பு, ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையிலான ஆயுதத் தயாரிப்புப் போட்டி அதன் காரணமாகக் கம்யூனிசம் பெற்ற பலத்த அடி, நவீனப் பழைமைவாதம் ஆகிய காரணிகளால் முதலாளித்துவம் உலகம் முழுவதும் வலுப்பெற்று வருகின்றது.

(தொடரும்)

# பாரதம்

# தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குத

# டில்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்ப



## உளவுத்து


(டில்லி)

**தீவிரவாதிகள் டில்லிக்கு**
**என்று உளவுத்துறை அ**
**தொடர்ந்து தலைநகர்**
**வளையத்துக்குள் கொண்**

டில்லி பொலிஸாரும் அதிரடிப்படை வீரர்களும்
விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். ந
அல்லது ஐந்து தீவிரவாதிகள் நாசகார செயல்களில் ஈடு
திட்டத்துடன் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற அதி
தகவலையும் உளவுத்துறை அதிகாரிகள் வெளியிட்
கிறார்கள்.

இதனால், டில்லி மாவட்ட பொலிஸார் நேற்றிரவில்

# மும்பை பயங்கரவாத தாக்குதல்; முக்கிய குற்றவாளி அமெரிக்காவில் கைது



(மும்பை)

மும்பை பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி தஹாவூர் ராணா அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார்.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலை எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. கடல் வழியாக மும்பைக்குள் புகுந்த லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகள் 10 பேர் சி.எஸ்.எம்.டி ரயில் நிலையம், தாஜ் ஹோட்டல், நரிமன் ஹவுஸ் உள்ளிட்ட இடங்களில் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

உலகையே உலுக்கிய இந்த தாக்குதலில் 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் 6 அமெரிக்கர்களும் அடங்குவர். மேலும் 300 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதி அஜ்மல் கசாப் மட்டும் **பொலிஸாரால் உயிரோடு பிடிக்கப்பட்டான்.** பின்னர் அவன் தூக்கிலிடப்பட்டான்.

இந்நிலையில் மும்பை தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட பயங்கரவாதி தஹாவூர் ராணா அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார். கனடா தொழில் அதிபரான தஹாவ்ூர் ராணா முதலில் அமெ ரிக்காவில் உள்ள சிக்காகோவில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்க பொலிஸார் டென்மார்க் மற்றும் இந்தியாவில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் மற்றும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கு உதவி செய்ததாக தஹாவூர் ராணா மீது குற்றம்சாட்டினர். இந்த வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம் டென்மார்க்கில் பயங்கரவாதிகளுக்கு உதவியது, லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கு உதவிய குற்றத்துக்காக தஹாவூர் ராணாவுக்கு 168 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கியது. ஆனால் இந்தியாவில் தாக்குதல் நடத்த அவர் பயங்கரவாதிகளுக்கு உதவி **செய்ததாகக் கூறப்பட்ட வழக்கில் இருந்து** விடுவித்து இருந்தனர்.

இதற்கிடையே மும்பை தாக்குதல் வழக்கில் அமெரிக்காவில் கைதாகி சிறையில் இருக்கும் மற்றொரு குற்றவாளி டேவிட் ஹெட்லி, இந்தியாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த தஹாவூர் ராணா லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கு நிதி உதவி அளித்தார் என வாக்குமூலம் அளித்திருந்தார். தஹாவூர் ராணா, டேவிட் ஹெட்லியின் நெருங்கிய நண்பர் ஆவார்.

இந்த நிலையில் தஹாவூர் ராணா கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டதால் தண்டனைக் காலம் முடியும் முன்பே அமெரிக்க சிறையில் இருந்து கருணை அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

இதையறிந்து இந்திய அரசு மும்பை தாக்குதல் வழக்கு தொடர்பாக விசாரணை நடத்த தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் என அமெரிக்காவுக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

இதைத்தொடர்ந்து அவர் கடந்த 10 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமெரிக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதி கலிபோர்னியாவிலுள்ள மாவட்ட நீதிமன்றில் நடக்கவுள்ளது. கொரோனாத் தொற்றால் தனிமையிலுள்ள தஹாவூர் ராணா அப்போது விசாரணையில் காணொளி மூலம் கலந்து கொள்வார் என கூறப்படுகிறது. எனவே மும்பை வழக்கு முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான தஹாவூர் ராணா விரைவில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்**கொண்டு வருகிறது.** (2)

## கொரோன

# இரட்டைக் கு
# மறுகணமே த

### மதுரையில் சோகம்

(டில்லி)

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த மறுகணம் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் மதுரையை சேர்ந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# கல்வான் ப
# இந்திய-சீன எ

(டில்லி)

இந்தியா - சீனாவிற்கு இடையிலான எல்லைப்பிரச்சினை போர்ப்பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்திய இராணுவம் கல்வான் பள்ளத்தாக்கின் அருகே பாலம் ஒன்றை அமைத்துள்ளது.

சுமார் 60 மீற்றர் நீளமுள்ள குறித்த பாலம் சீமந்து மற்றும் இரும்பால் **அமைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊட**

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான கணிதம் மாதிரி வினாத்தாள்

# மத்திய மாகாணம்- மாத்தளை வலயக் கல்வி அலுவலகம்

நேரம்: 2 மணித்தியாலம் — வினாப்பத்திரம் - 01

## A பகுதி


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.

1. ரூபாய் 24000 விற்பனைப் பெறுமதி கொண்ட கையடக்கத் தொலைபேசி யொன்றிற்கு 15% படி அறவிடப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) ஐக் காண்க.

2. சுட்டி வடிவில் எழுதிக் காட்டுக. Lg1000 = 3


3. $4x^2y$ , $6x$, $3y^2$ எனும் அட்சரகணிதக் கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க.

4. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளின்படி X இன் பெறுமானம் காண்க.




5. காரணி காண்க. $x^2 - 5x + 6$


6. 14cm ஆரையும் 45°கோணமும் கொண்ட ஆரைச்சிறையின் வில்லின் நீளத்தைக் காண்க.




7. 7, 12, 17, ... எனும் கூட்டல் விருத்தியின் 21 ஆம் உறுப்பைக் காண்க.

8. குறித்த வேலையொன்றின் 1/4 ஐ நிறைவு செய்வதற்கு 5 மனிதர்களுக்கு 3 நாட்கள் தேவைப்படுகிறது. 10 மனிதர்களுக்கு இம் முழுவேலையை நிறைவு செய்யத் தேவையான நாட்களின் எண்ணிக்கையைக் காண்க.

9. உருவிலுள்ள தரப்பட்டுள்ள தரவுகளின் படி a இன் பெறுமானம் யாது?.




10. 7cm ஆரையுடைய செவ்வட்ட உருளையொன்றின் வளைமேற்பரப்பின் பரப்பளவு 880cm² ஆகும் எனின் அதன் உயரத்தைக் காண்க.ஆரை r உம் h உயரமும் கொண்ட உருளையின் வளைமேற்பரப்பளவு $2\pi rh$ ஆகும். $\pi = 22/7$ என்க.)

11. உருவிலுள்ள தரவுகளுக்கமைய $\Delta ABY$, $\Delta ABX$ என்பன ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


(i) ப, ப, ப (ii)ப, கோ, ப

(iii) கோ, கோ, ப (iv) செம்.ப, ப




12. சுருக்குக. $\frac{2x^2}{y} \div \frac{4x}{5y}$


13. 28cm ஆரையும் 90⁰ கோணமும் கொண்ட ஆரைச்சிறையின் பரப்பளவைக் காண்க.




14. X=1<-3 எனும் சமனிலியை திருப்தி செய்யும் X இன் தீர்வுத் தொடையிலுள்ள பெரிய நிறைவெண் எது?

15. தீர்க்க. $\frac{1}{x} + \frac{1}{2x} = \frac{1}{6}$

16. உருவில் O வை மையமாகவும் 10cm ஆரையையும் கொண்ட வட்டம் காட்டப்பட்டுள்ளது. AB , OC என்பன X இல் இடை வெட்டுகின்றன. நாண் AB இன் நீளம் 16cm எனின் XC இன் நீளத்தைக் காண்க.




17. $n(\varepsilon) = 15,\ n(B) = 7,\ n(A \cup B) = 10,\ n(A \cap B) = 2$ எனின்

I. $n(A)$

II. $p(A)$ ஐக் காண்க.

18. உருவில் O ஐ மையமாகக் கொண்ட வட்டம் காட்டப்பட்டுள்ளது. AD ஒரு நேர்கோட்டுத் துண்டமெனின் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி X இன் பெறுமானம் காண்க.




19. 180 விவசாயிகள் செய்யும் பயிர் வகை தொடர்பாக வட்டவரைபில் காட்டப்பட்டுள்ளன. கரட், போஞ்சி பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை சமனெனின் கரட் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கையைக் காண்க.





20. முகங்களில் 1 இலிருந்து 6 வரை இலக்கமிடப்பட்ட கோடாத சதுரமுகித் தாயக்கட்டையொன்றை உருட்டி விட்டு மேல்நோக்கி விழும் பக்கம் அவதானிக் கப்படுகின்றது.


I. 6 பெறப்படுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

II. 6 அல்லது 5 பெறப்படுவதற்கான நிகழ்தகவைக் காண்க.


21. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு X இன் பெறுமானம் காண்க.





22. உருவில் அரியமொன்றின் வலை காட்டப்பட்டுள்ளது. முக்கோணி ABC இன் பரப்பளவு 10cm² உம் XY= 1.5 cm உம் எனின அரியத்தின் கனவளவைக் காண்க.





23. PQRS ஓர் இணைகரமாகும். ΔPQR இன் பரப்பளவு 25cm² எனின் Δ QRS இன் பரப்பளவு யாது?




24. உருவில் தரப்பட்டுள்ள நேர்கோட்டின் சமன்பாடு 2Y=-X+b எனின் b இன் பெறுமானம் காண்க.




25. ABC எனும் முக்கோணி வடிவக் காணியின் பரும்படிப்படம் உருவில் காட்டப்பட்டுள்ளது. A இலிருந்தும் C ...ம் சமதூரத்தில் AB எல்லை மீதுள்ள புள்ளி P ஐக் காண்பதற்குத் தே... அமைப்புக் கோடுகளின் பரும்படிக் குறிப்பை தரப்பட்ட உருவில் வரைக.



## B பகுதி

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தகடொன்றின் மொத்த மேற்பரப்பில் 1/2 இற்கு செப்பு நிறத்திலும் மீதியின் 2/3 இற்கு வெள்ளி நிறத்திலும் எஞ்சிய பகுதிக்கு தங்க நிறத்திலும் முலாமிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

I. வெள்ளி நிறத்தில் முலாமிடும் பகுதி முழுத்தகட்டின் என்ன பின்னமாகும்?


II. தங்க நிற முலாமிடும் பகுதி முழுத்தகட்டின் என்ன பின்னம்?

செப்பு, வெள்ளி, தங்கம் ஆகிய நிறங்களில் முலாமிட முறையே ரூபா 10, ரூபா 25, ரூபா 100 வீதம் செலவாகிறது.

III. வெள்ளி நிறத்தில் முலாமிட ஏற்படும் செலவு ரூபா 400 எனின் தகட்டின் மொத்தப்பரப்பளவைக் காண்க.

IV. மேற்கூறிய முறையில் முழுத்தகட்டிற்கும் முலாமிடுவதற்கு ஏற்படும் மொத்தச் செலவைக் காண்க.

2. நுவன் நோயாளியொன்றைப் பார்ப்பதற்காக வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு மோட்டார் வண்டியில் பயணம் செய்த விதம் கீழே தூர நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது.




I. நுவனின் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கான தூரத்தைக் காண்க.

II. மோட்டார்வாகனத்தின் கதி மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றராகும்?

III. நுவன் வைத்தியசாலையில் செலவழித்த காலம் யாது?

IV. அவன் வைத்தியசாலைக்குச் சென்ற அதே பாதையில் $90kmh^{-1}$ எனும் மாறாக் கதியில் திரும்பி வீட்டை அடைந்தானெனின் அதனை அதே தூர நேரவரைபில் வரைக.

V. வைத்தியசாலையில் செலவிட்ட நேரத்தைப் புறக்கணித்து மோட்டார் வாகனத்தின் சராசரிக் கதியைக் காண்க.

3. நிறுவனமொன்றில் பங்கொன்றின் சந்தைப்பெறுமதி ரூபா 125 ஆகும்.

I. ரஞ்சித் அந்நிறுவனத்திலிருந்து 600 பங்குகளைக் கொள்வனவு செய்தார். அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு முதலிட்ட தொகை யாது?

II. வருட இறுதியில் பங்கிலாபமாக ரூபா 9000 கிடைத்ததெனின் நிறுவனம் பங்கொன்றிற்கு வழங்கும் வருடாந்த பங்கிலாபத்தைக் காண்க.

III. இந்நிறுவனத்தில் அதே விலைக்கு பங்குகளைக் கொள்வனவு செய்த ஒருவருக்கு ரூபா 24000 வருடாந்த பங்கிலாபமாகக் கிடைக்குமெனின் அவர் நிறுவனத்தில் முதலிட்ட தொகையைக் காண்க.

IV. வருடஇறுதியில் ரஞ்சித் தனது 600 பங்குகளையும் விற்றார். அவர் பங்கிலாபமாகப் பெற்ற தொகையினதும் மூலதன இலாபத்தின் கூட்டுத்தொகையும் அவரது முதலீட்டின் 28% ஆகும். அவர் ஒரு பங்கை விற்ற விலையைக் காண்க.

4. பெட்டியொன்றில் ஒரே வகையான 3 சிவப்புப் பேனைகளும் 2 நீலப் பேனைகளும் உள்ளன. அமல் பெட்டியிலிருந்து எழுமாறாக ஒரு பேனையை எடுத்தான். அதனை மீண்டும் பெட்டியில் இடாமல் இன்னொரு பேனையை எடுத்தான்.

I. அமல் இரு சந்தர்ப்பங்களிலும் பெட்டியிலிருந்து பேனைகள் எடுக்கும் முறையைக் காட்டும் மாதிரிவெளியை தரப்பட்டுள்ள நெய்யரியில் குறித்துக் காட்டுக.

II. அமல் எடுத்த இரு பேனைகளும் வித்தியாசமான நிறங்களைக் கொண்டிருப்பதற்கான நிகழ்ச்சி A எனின் A இற்கான மூலகங்களை நெய்யரியில் அடைத்துக் காட்டி P(A) ஐக் காண்க.


அமல் மேலே கூறியவாறு பெட்டியிலிருந்து முதலில் எடுத்த பேனை சிவப்புப் பேனையாக இருந்தால் மட்டும் அதனை மீண்டும் பெட்டியினுள் இடாமல் பெட்டியிலிருந்து இன்னொரு பேனை எடுப்பார் எனின்

III. இச்சந்தர்ப்பத்திற்கான மாதிரிவெளியை மரவரிப்படமொன்றில் காட்டுக.

IV. அமலுக்கு ஒரு நீலப் பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவை மரவரிப்படத்திலிருந்து காண்க.

5. பாடசாலையொன்றில் ஒரு குறித்த தினத்தில் ஆசிரியர்களின் நாளாந்த வருகை தொடர்பான தரவுகளடங்கிய பூரணமற்ற கூட்டமாக்கப்பட்ட தரவுத் தொகுதியும் பூரணமற்ற வலையுரு வரையமும் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு 0-5 என்பது 0யிலும் கூடிய 5யிலும் குறைய 5ற்கு சமனான எனப் பொருள்படும். இவ்வாறே ஏனைய வகுப்பாயிடைகளையும் கொள்க.

| வருகை தந்த நேரத்திலிருந்து பாடசாலை ஆரம்பமாவதற்குள்ள நேரம்(நிமி) | ஆசிரியர்களின் எண்ணிக்கை (மீடிறன்) | திரள் மீடிறன் |
|---|---|---|
| 0-5 | 3 | --- |
| 5-10 | 5 | --- |
| 10-15 | 7 | --- |
| 15-20 | --- | --- |
| 20-25 | --- | --- |





i. அன்றைய தினம் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் வருகை தந்த ஆசிரியர்கள் 32 பேர் எனின் வலையுரு வரையத்தின் தரவுகளையும் பயன்படுத்தி மீடிறன் நிரலை நிரப்புக.

ii. அதிலிருந்து வலையுரு வரையத்தைப் பூரணப்படுத்துக.

iii. திரள் மீடிறன் நிரலைப் பூர்த்தி செய்க.

iv. கீழே தரப்பட்டுள்ள அச்சுத் தொகுதியில் திரள் மீடிறன் வளையியை வரைக.




V. இத்தினத்தில் ஆசிரியர்கள் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் வந்த இடையக்காலத்தைக் காண்க.

## 15.06.2020 அன்று வெளியான க.பொ.த சாதாரணதரம் வரலாறு - பகுதி 1 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 4 | 11) | 2 | 21) | 1 | 31) | 1 |
| 2) | 3 | 12) | 3 | 22) | 3 | 32) | 4 |
| 3) | 2 | 13) | 2 | 23) | 1 | 33) | 4 |
| 4) | 1 | 14) | 1 | 24) | 3 | 34) | 1 |
| 5) | 4 | 15) | 1 | 25) | 4 | 35) | 3 |
| 6) | 4 | 16) | 2 | 26) | 3 | 36) | 2 |
| 7) | 2 | 17) | 2 | 27) | 2 | 37) | 1 |
| 8) | 4 | 18) | 4 | 28) | 1 | 38) | 3 |
| 9) | 3 | 19) | 1 | 29) | 3 | 39) | 2 |
| 10) | 3 | 20) | 2 | 30) | 4 | 40) | 1 |

## 15.06.2020 அன்று வெளியான க.பொ.த சாதாரணதரம் வரலாறு - பகுதி 2 விடைகள்

01)

(அ) i. குறிக்கப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தினைப் பார்க்கவும்.
ii. குறிக்கப்பட்ட உலக புறவுருவப் படப் பகுதியினைப் பார்க்கவும்.

(ஆ)i. A - A.E குணசிங்க
B - எட்டாம் வீரபராக்கிரமபாகு
C - முதலாம் உபதிஸ்ஸ
D - வலகம்பாகு / வட்டகாமினி அபய

ii. 1). கல்லாயுதங்கள்
2). மத்திய கற்காலம் / கற்காலம் / வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3). படிகற் கற்பாறை அல்லது நிலக்கண்ணாடி அல்லது திருவானைக்கல்
4). இரணை மடுப்படிவு. இரத்தினக்கல் சுரங்கம்
(கற்கால வசிப்பிடங்களை எழுதியிருந்தாலும் புள்ளிகள் வழங்கவும்)

iii. 1). ஐந்தாம் வில்லியம் அல்லது ஸ்டெத் ஹோல்டர்
2). ஒல்லாந்து
3). கியூமாளிகை
4). பன் எங்கல் பெக்

பகுதி - II

02. i. ஈரவலயம், அரை வறள் வலயம், தாழ்நில உலர்வலயம், தாழ்நில இடை உலர் வலயம், மலைநாட்டு இடை உலர் வலயம், வறள் வலயம்

ii. A - கித்துள் கல பெலிலென
B - ஹோமோ செப்பியன்
C - பாகியன் கல
D - இராவண எல்ல

iii. அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள்
உ+ம்:- யாப்பகுவவிற்கு அண்மையில் உள்ள கல்சொஹன் மயானம், கலே வெலைக்கு அண்மையில் அமைந்துள்ள யட்டிகல் பொத்த மயானம், தம்புள்ளைக்கு அண்மையில் உள்ள இப்பன் கட்டுவ மயானம்
- பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி பாதுகாத்து வைக்கப்பட்டமை

உ+ம்:- ஹல்துமுல்ல, பெரகல முன்வரலாற்றுக் கால மயானங்கள்

iv.
(A) ஆரம்ப வரலாற்றுக் காலம் என்பது கி.மு 450 - கி.பி 300 வரையிலான காலப் பகுதியாகும்.

(B)
- சிறு குளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புக்கள் பரம்பியிருந்தமை.
- குடியிருப்புக்களின் பரம்பலில் பௌதிகப் பின்னணி செல்வாக்குச்செலுத்தியமை
- குளக்கிராமங்களுக்கு மேலதிகமாக தொழில் ரீதியாக ஒன்றுபட்ட குடியிருப்புக்கள் காணப்பட்டமை. ( உ+ம் கோபாலகாம, கசிகாரகாம )
- தொழில்களின் அடிப்படையில் கிராமங்கள் செயற்பட்டமை (உ+ம் :- பட்டானகாம, ஒலகம்,நியம்கம்)
- நதிகளுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் குடியேற்றங்கள் பரவியமை
- வேலியிடப்பட்ட, வேலியிடப்படாத கிராமங்கள் காணப்பட்டமை
- நகரம் மற்றும் புரம் என்னும் குடியிருப்புக்கள் காணப்பட்டமை.

03)

i. A - பதகு B - ஹதிஅதெக C - பன அதெக

ii. A - பண்டுகாபய B - முதலாம் காசியப்ப C - நிஸங்க மல்ல D - முதலாம் கஜபாகு

iii.
- புராதன வைத்தியசாலைகளின் சிதைவுகள் காணப்பட்டமை ( உ+ம் மிகிந்தலை, ஆலாஹெனப்பிரிவேனா)
- வைத்தியர்களுக்கு கிராமங்கள் வழங்கப்பட்டிருந்தமை
- சத்திரசிகிச்சை உபகரணங்கள் கண்டறியப்பட்டமை ஆலாஹெனப் பிரிவேனா
- மருத்துவ ஓடம், மருந்து அரைக்கும் கல் பயன்படுத்தப்பட்டமை (மிகிந்தலை, ஆலாஹெனப்பிரிவேனா)

iv.
- ருவான்வெலிசாய தூபியின் உச்சியில் இடிதாங்கி (வஜ்ர சும்பட்ட) பொருத்தப்பட்டமை.
- ருவான் வெலிசாய தூபியின் அத்திவாரம் அமைக்கப்பட்ட தொழில்நுட்பமுறை
- சீகிரியா நகர நிர்மாணமும் பூங்கா அலங்காரமும்

04)

i. எதிரிகளின் ஆக்கிரமிப்பு, மத்திய அரச நிர்வாகம் சீர்குலைந்திருந்தமை பாதுகாப்பு இல்லாமல் போனமை, வர்த்தகம் போக்குவரத்துத் தடைப்பட்டமை, மக்கள் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தமை

ii. A - முதலாம் புவனேகபாகு C - இரண்டாம் பராக்கிரமபாகு
B - நிஸங்க அழகக்கோனர் D - ஆரியச் சக்கரவர்த்தி அரச வம்சம்

iii.
- பௌத்த சமயமே பிரதானமான சமயமாகும்.
- அரசர்கள் தெய்வங்கள் மீது அதீத நம்பிக்கை கொண்டமை
- விஷ்ணு, விபீஷணன், முருகன், சமன் முதலிய தெய்வங்களுக்கு கோவில்கள் அமைத்தமை.
- தூது காவியங்களில் விஷ்ணு, விபீஷணன் ஆகிய தெய்வங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை
- ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்துக்கு அண்மையில் உள்ள சிவாலயம், சிலாபம் முன்னேஸ்வரம் கோயில் இக்காலப் பகுதிக்குரியவை
- முஸ்லிம் வியாபாரிகளும் தாம் வாழ்ந்த கரையோரத்தில் பள்ளிவாசல்களை அமைத்திருந்தமை.

iv. அரசியல்
- சப்புமல் குமாரனை அனுப்பி யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டமை.
- வன்னியர்களை கோட்டையின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தமை
- அம்புலுகல குமாரன் மூலம் மலைநாட்டு ஆட்சியாளன் ஜோதிய என்பவரின் கிளர்ச்சியை அடக்கியமை.

கல்வி பண்பாட்டு வளர்ச்சி
- பௌத்த கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெற்றமை.
- பெப்பிலியானே சுனேத்திரதேவி பிரிவெனா, காரகல பத்மாதேவி பிரிவெனா, தெவிநுவர.ருகல் குலதிலக்க பிரிவெனா, விதாகம கணானந்த பிரிவெனா போன்றனவற்றோடு பண்டிதர்கள் உருவாகியமை.
- தொட்டகமுவே ஸ்ரீராகுலதேரர், காரகல வனரத்தினதேரர், விதாகம மைத்திரி தேரர்.
- தூதுகாவியங்கள் :- செலலஹினி சந்தேசய, பரவி சந்தேசய, ஹங்க சந்தேசய, கிரா சந்தேசய.
- பிற இலக்கிய நூல்கள்:- பெரகும்பா சிரித்த, காவிய சேகரய, புதுகுண புது குணாலங்காரய, குத்திலகாவியம்.
- தமிழ்மொழி நூல்கள், பக்தி சதகம், சரசோதிமாலை இவற்றோடு பக்தி இலக்கியம், போர்இலக்கியம், புகழ் காவியம், விளக்கவுரை நூல்கள் என இலக்கியம் பல்வேறு பண்புகளைக்கொண்டிருந்தமை.

i. A - பலனை, உன்னஸ்கிரிய, B - சேனசம்மத விக்கிரபாகு

ii. A - முதலாம் இராஜசிங்கன் B - பிலிப்த ஒலி வேரா
C - தியோகோ. த மெல்லோ D - பெரன் வென் எக்

iii.
- கண்டி இராச்சியத்தின் மீதான போர்த்துக்கேயரின் தாக்குதலை அடக்குதல்.
- போர்த்துக்கேயரை நாட்டில் இருந்து வெளியேற்றல்.
- கண்டி இராச்சிய பிரபுக்களிடம் இருந்து வெளிப்பட்ட எதிர்ப்புக்களை கட்டுப்படுத்துதல்.
- ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பில் இருந்து கண்டி இராச்சியத்தை பாதுகாத்துக் கொள்ளல்.

iv. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவின் ஆலோசனைப்படி நாடெங்கும் பௌத்த சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டமை.
- சீயம் நாட்டுக்கு தூதுக்குழுவை அனுப்பி உபாலிதேரர் உட்பட இன்னும் பல பிக்குகளை அழைத்து கி.பி 1753 இல் உபசம்பதாவை நடத்தியமை இதனால் இன்றைய சீயம் நீக்காய ஆரம்பிக்கப்பட்டமை.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிற்கு சங்கராஜா பதவியை வழங்கி பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த அவருக்கு உதவியமை
- விகாரைகள் புனரமைப்புச் செய்யப்பட்டமை (தாழ்நாட்டிலும் கண்டி இராச்சியத்திலும்)
- கி.பி 1766 இல் ஒல்லாந்தருடன் சமாதான ஒப்பந்தம் செய்து மோதல்களை நிறுத்தியமை.

06)

i. மிளகு, கராம்பு, முத்து, ஏலம், இரத்தினக்கற்கள், யானைத்தந்தம்

ii.
- இலங்கையின் அமைவிடம்
- கறுவா உட்பட பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்கள் கிடைக்கப் பெற்றமை

iii.
- மழைகாலம் ஆன படியால் ஆங்கிலப் படைகளிடையே நோய்கள் பரவியமை, உணவு குடிபானங்களுக்குத் தட்டுப்பாடு, கரையோரப் பகுதிகளில் இருந்து கண்டி உடனான தொடர்புகளை கண்டி ஆட்சியாளர்கள் தடை செய்தமை.
- ஆளுநர் நோர்த்திற்கு கண்டி இராச்சியம் பற்றி அறிவு மற்றும் அனுபவம் இல்லாமை.
- சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கண்டிப் படையினர் மேற்கொண்ட படையெடுப்பு

iv. A - 1840 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட தரிசு நிலச் சட்டத்தால் அதாவது 30 வருடங்கள் தொடர்ச்சியாக அனுபவித்தமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்க முடியாத பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத நிலம் அரசுடைமையாக்கப்பட்டது. கண்டி மக்கள் பரம்பரையாக அனுபவித்து வந்த பெரும்பாலான நிலங்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கு அவர்களிடம் சட்ட ரீதியான ஆவணங்கள் காணப்படவில்லை. இவை அரசுடைமையாக்கப்பட்டதோடு மிகவும் குறைந்த விலையில் இக்காணிகள் வெளிநாட்டவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு தமது காணிகள் பறிக்கப்பட்டமையாலும் விவசாய நடவடிக்கைகள் தடைப்பட்டுப் போனதாலும் அரசு தொடர்பாக பொதுமக்கள்அவநம்பிக்கையுற்றனர்.

B - 1833 ஆம் ஆண்டின் கோல்புறூக்கின் சீர்திருத்தங்கள் காரணமாக கிராம சபைகளிடம் இருந்த நீதி அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது. கிராமப் புறங்களில் சிறிய பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பது இதன் முக்கியமானதொரு சேவையாகும். இவற்றோடு கட்டாய இராஜகாரிய முறையும்ஒழிக்கப்பட்டது.
கிராம சபைகளுக்கு பிரதான உழைப்பை பெற்றுக் கொடுக்கும் பிரதான வழிமுறை இல்லாமல் செய்யப்பட்டது.

07)

i. A - மனிங் B - சோல்பரி C - குறா - மக்கலம்

ii.
- சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக்கழகம் உருவாக்கப்பட்டமை

- மலைநாடும் கரையோரப் பிரதேசமும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே ஆட்சி முறையின் கீழ்க் கொண்டுவரப்பட்டமை.
- கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமை அகற்றப்பட்டமை.
- நாடு 5 மாகாணங்களாக பிரிக்கப்பட்டமை.
- ஆங்கிலக்கல்வி பரவலாக்கப்பட்டமை.

iii.
- அரசுக்கழகம் தோற்றுவிக்கப்பட்டமை.
- சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
- நிர்வாகக்குழு முறைமை தோற்றுவிக்கப்பட்டமை.
- ஆளுநரும் அரச உத்தியோகத்தர்கள் மூவரும்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறைமை நீக்கப்பட்டமை.

**iv. A - அரசியல் யாப்பில் 18 ஆவது விதியில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.**
**சட்டத்தை அனுபவித்தல், செயற்படுத்துதல், பாதுகாப்புப் பெறல் அனைவருக்கும் பொதுவானதாகும். சட்டத்தின் மூலமாகவன்றி நபர் ஒருவரின் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் இடைஞ்சல் புரியக்கூடாது அனைத்து குமுமக்களுக்கும் சிந்திக்கும் சுதந்திரத்திற்கும் மனச்சாட்சிப்படி நடக்கும் சுதந்திரத்துக்கும் உரிமையுண்டு. குமுமக்கள் அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரம் உண்டு.**

B - உரிமைகளை அனுபவிப்பதற்காக நீதிமன்றத்தொகுதி அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்).அரசியல் யாப்பு நீதிமன்றம், இதில் உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம் இரண்டும் பிரதானமானவை.குடியியல் வழக்குகளை அந்தந்த மாவட்ட நீதிமன்றங்கள் விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது.
குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நீதிமன்றங்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நீதிச்சேவை ஆலோசனைச் சபையும் நீதிமன்ற ஒழுக்காற்றுச் சபையும் உருவாக்கப்பட்டன. அரசியல் யாப்பு நீதிமன்றம் அரசியல் யாப்புத்தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கும் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் யாப்புக்கு பொருத்தமானதா என பரிசீலிப்பதற்குமாக உருவாக்கப்பட்டது.

## பகுதி - III

08)

i. அறிவு வளர்ச்சி, கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியர் வசமானமை, வர்த்தக முன்னேற்றமும் புதிய செல்வந்த வர்க்கத்தினரின் தோற்றமும், மானிடவாதம்.

ii. A - அச்சியந்திரம் B - குருதிச் சுற்றோட்டம் C - தொலைநோக்கி
D - கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருதல்.

iii. A - பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருந்த மொழி, இலக்கியம், சிற்பம், சித்திரம்,கட்டிடக்கலை ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றம் கல்வி மறுமலர்ச்சி எனப்படும்.

B - தாந்தே, பெற்றாக், பொக்காஷியோ, சேர் தோமஸ்மூர், பிரான்சிஸ் பேக்கன், வில்லியம் ஷேக்ஸ்பியர்,இராஸ்மஸ்

iv.
- புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை. உ+ம் பிலிப்பைன்ஸ், இந்தியா, கனடா, மேற்கு இந்தியத்தீவுகள்
- புதிய வர்த்தகப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- வியாபார நடவடிக்கைகள் விரிவடைதல்.
- குடியேற்றவாதம் ஆரம்பமானமை.
- ஐரோப்பியரது சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவியமை.
- ஆசியா, ஆபிரிக்க நாடுகளிடையே ஐரோப்பாவின் ஆதிக்கம் பரவியமை.
- ஐரோப்பிய கலை, கட்டிடக்கலை உலகில் ஏனைய நாடுகளுக்குப் பரவியமை.
- விஞ்ஞான தொழில்நுட்ப முறைகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பரவியமை.

09)

i. போக்குவரத்து, தொடர்பாடல், விவசாயம்

ii.
- சனத்தொகை அதிகரித்தமையால் கேள்வி அதிகரித்தமை.
- இரும்பு, உருக்கு எனும் கனியங்கள் பிரித்தானியாவில் காணப்பட்டமை.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தை வாய்ப்புக்கள் காணப்பட்டமை (காலனித்துவ ஆட்சியின்கீழ்)
- வர்த்தக விருத்தி காரணமாக பணம் படைத்த செல்வந்தர் வகுப்பு தோன்றியமை.
- நில அடைப்பு இயக்கம் காரணமாக கிராமிய விவசாயிகளை கைத்தொழிற்றுறைகளில் பயன்படுத்தக்கூடிய நிலைமை காணப்பட்டமை.
- அரசியல் உறுதிப்பாடு.
- உயர் குடும்பங்கள் கைத்தொழில் துறைக்கு உதவி புரிந்தமை.


iii.
- 1735 இல் தோமஸ் நீயு கொமன் என்பவரால் நீராவியால் இயங்கும் இயந்திரம் கண்டுபிடித்தமை.
- 1736 இல் ஜேம்ஸ் வோட் என்பவரால் நீராவியால் இயங்கும் செயற்றிறன் மிக்க இயந்திரம் கண்டுபிடித்தமை.
- 1812 இல் ஹம்பிரி டேவி என்பவரால் பாதுகாப்பான விளக்கு கண்டுபிடிக்கப்பட்டமை.
- 1839 இல் இரும்புக் கேபிள் கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.


iv. ■ பெருந்தோட்ட விவசாயம் -
- 1804 இல் கோப்பி விதைகளை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இறப்பரை ஏற்றுமதிக்காகத் தயார்படுத்துவதற்கான இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.
- தேயிலைக் கொழுந்தினை உலர்த்துதல் முதல் ஏற்றுமதிக்காகத் தரப்படுத்துதல் என்பன இயந்திர சாதனங்களாலேயே மேற்கொள்ளப்பட்டமை.

■ போக்குவரத்து - பெருந்தெருக்கள் அமைத்தலில் 1885 இல் மெக்கடம் முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது.
- ஆளுநர் ஹென்றி வோட் அவர்கள் புகையிரத வீதி அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

■ தொடர்பாடல் 1815 இல் பெரு நகரங்களை இணைக்கும் வகையில் தபால் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. தபால் முத்திரை முதன் முதலாக 1857 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

- 1858 ஆம் ஆண்டு தபால் தந்தி மூலம் செய்தி பரிமாறும் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.



# வெளிநாடு

# ...தல் நடத்தலாம்
# ...ற்பாடுகள் தீவிரம்
# ...துறை எச்சரிக்கை

**...டில்லிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தலாம் ...றை அமைப்பு எச்சரிக்கை விடுத்ததைத் ...லநகர் டில்லி உச்சக்கட்டப் பாதுகாப்பு ...கொண்டு வரப்பட்டுள்ளது.**

... வீரர்களும் தீவிர ...கின்றனர். நான்கு ...செயல்களில் ஈடுபடும் ... என்ற அதிர்ச்சித் ...கள் வெளியிட்டிருக்

... நேற்றிரவிலிருந்து

வாகன தணிக்கை, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். டில்லி எல்லைகள் அதிரடிப்படை வீரர்கள் மூலம் அதிதீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

சீனா, பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட எல்லைப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

# ...ரானாவின் கோர முகம்
# ...க் குழந்தைகளை பிரசவித்த ...மே தாயின் உயிர் பிரிந்தது

...கம்

...றினால் ...ரட்டைக் ...லுகணம் ...சம்பவம் ...துள்ளது. ... சேர்ந்த ...ரோனா ...வைத்திய ...ந்தார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் தொற்றின் தாக்கம் அதிகமாக காணப்பட்டமையினால் மருத்துவர்கள் தாயையும் குழந்தைகளையும் காப்பாற்ற போராடி வந்தனர்.


அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகள் வெளியே எடுக்கப் பட்டதன் பின்னர் குழந்தைகளுக்கு கொரோனா சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு கொரோனா தொற்று இல்லை என வைத்தியர்கள் உறுதி செய்தனர்.

இந்நிலையில் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பிறந்து தனது தாயின் அரவணைப்பினைப் பெறாத குழந்தைகளை நினைத்து வைத்தியர்கள் மற்றும் உறவினர்கள் கண்ணீர் சிந்தி நெகிழ்ந்துள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2-8)

# வெட்டுக்கிளிகள் ஊடுருவல்



(ஸ்ரீகங்கநகர்)

பாகிஸ்தானில் இருந்து பெருமளவான புதிய வெட்டுக்கிளிகள் ஊடுருவியுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீகங்கநகர் மாவட்டத்தில் புகுந்துள்ள இந்த வெட்டுக்கிளி திரள் சுமார் 5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வெட்டுக்கிளிகளின் இனப்பெருக்கம் பிகானேர் மாவட்டத்தில் பதிவாகி உள்ளதுடன், புதிய வெட்டுக்கிளி திரளைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் வேளாண் துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (2)

# காஷ்மீர் எல்லையில் தொடர் தாக்குதல்; இந்திய வீரர் ஒருவர் உயிரிழப்பு!



(காஷ்மீர்)

காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடத்திய தாக்குதலில் இந்திய வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

பாகிஸ்தான் இராணுவம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய எல்லைப் பகுதிகளை குறிவைத்து அவ்வப்போது அத்துமீறி தாக்குதல் நடத்துகிறது. இதற்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், நேற்றுக்காலை ஜம்மு-காஷ்மீரின் புஞ்ச் மற்றும் ரஜோரி மாவட்டங்களின் பல்வேறு செக்டார்களில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் சிறிய ரக ஆயுதங்கள் மற்றும் மோட்டார் குண்டுகள் மூலம் இந்திய நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.


இந்திய இராணுவம் தரப்பில் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில், இந்தியா தரப்பில் ஒரு இராணுவ வீரர் உயிரிழந்தார். இதன்மூலம் இந்த மாதத்தில் இதுவரை 5 இந்திய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் இராணுவம் எல்லை தாண்டி தாக்குதல் நடத்துவது கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ...ர் பள்ளத்தாக்கில் பாலம் அமைப்பு; ...ன எல்லையில் போர்ப்பதற்றம் அதிகரிப்பு

...இடையி ...ர்ப்பதற் ...லையில் ...ன் பள் ...ஒன்றை

... குறித்த ...ம்பால் ...ய ஊட




கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்மூலம் போர்ப்பதற்றம் மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பாலத்தின் மூலம் கல்வான் ஆறு மற்றும் ஷையோக் ஆறு சங்கமிக்கும் முக்கிய பகுதியை எளிதில் அடையலாம் என்பதுடன் இராணுவ தளபாடங்களை கொண்டு செல்வதற்கு இலகுவாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷையோக் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இந்த இரும்புப் பாலம் இந்திய-சீன உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டில் இருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

மேலும் இந்திய-சீன படைகள் சண்டையிட்ட இடத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

எல்லையில் மோதல் நடைபெற்றதையடுத்து பாலத்தின் கட்டுமானப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு 72 மணி நேரத்தில் குறித்த பாலம் கட்டி முடிக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

சீனாவுடன் மோதல் அதிகரித்து வரும் நிலையில் எல்லையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவது பாதுகாப்பை உறுதிசெய்ய எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



எனவே காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் காணி உரித்துக்கள் நிர்ணயம் செய்வதற்கு எடுக்கப்பட்டு காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தினால் இன்னமும் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்படாத பிரதேசத்திற்குள் வரும் TP காணிகளெல்லாம் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தால் உரித்துக்கள் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்டவை என்றே எடுத்துக்கொள்ளப்படும்.

### காணி நிர்ணயச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சட்டங்கள் எவை?

❖ 1840 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அரச காணிகள் (அத்துமீறிக் கைப்பற்றுதல்) கட்டளைச் சட்டம்.

❖ 1897 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத் தரிசு நிலக் கட்டளைச் சட்டம்.

❖ 1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கக் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம்.

❖ ஆவணங்களைப் பதிவு செய்யும் சட்டம்.

### காணி நிர்ணயத்தின் போது எடுக்கப்படும் நடபடிகள் என்ன?

முன்னர் கூறியது போன்று இலங்கையில் உள்ள சட்டங்களின் படி ஒரு காணி அரச காணியா? அல்லது தனியார் காணியா? என்பதை தீர்மானிப்பது காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களம் மட்டுமே. காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கூறப்பட்டவாறு உரித்து தீர்மானிப்பதற்பான நடபடிகள் கீழே தரப்பட்டுள்ளன.

i) காணி நிர்ணயம் தொடர்பான செயற்பாடு.

❖ அடிப்படைக் காணிப் பரிசீலனை.

❖ காணி நிர்ணயத் திணைக்களம். நிர்ணயம் செய்ய வேண்டிய பிரதேசத்தை தெரிவு செய்தலும் அதனை நில அளவை செய்து அரச காணிகளுக்கான நில அளவைப்படங்களைத் தயாரிக்குமாறு நில அளவையாளர் நாயகத்திடம் வேண்டுதல்.

❖ நில அளவையாளர் நாயகம் புலத்தில் உள்ளவாறு அரச காணிகளை அறிந்து அதற்குரிய நில அளவைப்படங்களைத் தயாரித்தல்.

❖ நில அளவையாளர் நாயகத்திடமிருந்து நில அளவைப்படங்கள் கிடைத்த பின்னர் நிலப் பாகங்களைப் பரிசீலித்தல், முடிக்குரிய மற்றும் நிர்ணயிக்க வேண்டிய காணிகளை அடையாளம் காணுதல்.

❖ நிர்ணய அறிவித்தலை வெளியிடல், பிரசாரம் செய்தல்.

❖ மரபுரிமைகளைப் பதிவு செய்தல், நிர்ணயிக்கும் விசாரணைகளை நடத்துதல்.

❖ அளந்து ஒதுக்க வேண்டுமானால் அத் தேவையை நிலவளவைகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.

❖ அளந்து ஒதுக்கப்பட்டது கிடைத்த பின்னர் வரைபடம் கோரல்.

❖ நிர்ணயக் கட்டளையைத் தயாரித்து ஆட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காணிகளைக் காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல்.

❖ நிர்ணயிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்தல்.

❖ நிர்ணயக் கட்டளையை வர்த்தமானியில் வெளியிடல், வரைபடங்களையும், வர்த்தமானிகளையும் விநியோகித்தல்.

❖ கிராமத்தை விடுவித்தல்.

கிராமத்தை விடுவித்தல் என்பது மேற்கூறப்பட்ட நடபடிகள் முற்றுப் பெற்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் வரையில் நிர்ணயத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமம்/ பிரதேசம் (பொதுவாக அரச காணிகள்) காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

அக்கிராமத்தினுள் / பிரதேசத்திற்குள் அரச காணி சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையேற்படின் முதலில் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும். காணி உரித்துக்கள் நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும் இக்கட்டுப்பாடு நீங்கும். இதுவே கிராமத்தை விடுவித்தல் எனப்படுகிறது. இந்நடைமுறை சுண்டிக்குளம் தேசியபூங்கா எல்லையிடும் போது வன ஜீவராசிகள் திணைக்களத்தால் பின்பற்றப்படவில்லை.

ii) நிர்ணயப் பணிகளின்போது காணி நிர்ணயத் திணைக்களத்திற்கு உதவுகின்ற நிறுவனாங்கள்.

❖ நில அளவைகள் திணைக்களம்.

❖ அரசாங்க அதிபர் அலுவலகாங்கள்.

❖ பிரதேச செயலகாங்கள்.

❖ அனைத்து மாவட்ட நீதிமன்றாங்களும் பிஸ்கால் அலுவலகாங்களும்.

❖ அரசாங்க அச்சகத் திணைக்களம்.

### காணி நிர்ணயத்தில் நில அளவைத் திணைக்களத்தின் பங்கு என்ன?

1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கக் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காணி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய இடம் எவை எவை என காணி நிர்ணயத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டு அவற்றை அளந்து நில அளவைப்படங்கள் (காணி அளவைப்படங்கள்) தயாரிக்கும்படி நில அளவைத் திணைக்களத்திடம் வேண்டப்படுகின்றது.

இச்சட்டத்திற்கமைய நில அளவைப்படங்கள் தயாரிக்கும்படி நில அளவைத் திணைக்களத்திடம் வேண்டப்பட்டதும், நில அளவைத் திணைக்களம் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளின் அமைப்புக்கேற்ப படங்களைத் தயாரிக்கின்றது. கிராமங்களில் குடியிருப்புகள் (தனியார் காணிகள்) செறிந்து இருக்கும் போது அக்கிராமங்கள் தனித்தனி அலகுகளாக எடுக்கப்பட்டு படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இவை கிராமப்படங்கள் **(Village plans)** என அழைக்கப்படுகின்றன. குடியிருப்புகள் (தனியார் காணிகள்) மிக ஐதாக உள்ள கிராமங்களின் படம் தயாரிப்பதற்கு பல கிராமங்கள் ஒரு அலகாக எடுக்கப்பட்டு பிரதேசவியல் ஆரம்பப்படம் **(Topogra phical Preliminary Plans)** தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நில அளவைப்படங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் காணி நிர்ணயத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு வர்த்தமானி அறிவித்தல், களப்பரிசோதனை நடத்தல், உரிமைக் கோரிக்கைகள் மீது விசாரணை நடத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் காணி நிர்ணயம் செய்யப்படும். காணி நிர்ணயத்தின்படி நில அளவைப்படங்களில் திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பின் அவை நில அளவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும். காணி நிர்ணயத் திணைக்களத்தின் வேண்டுதலுக்கு ஏற்ப படங்கள் திருத்தப்பட்டு அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு திருத்துவதற்காகச் செய்யப்படும் அளவை பகுப்பளவை **(Demarcation Surveys)** எனப்படும். இதனை அடுத்து இறுதி அறிக்கை வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டதும் மேற்கூறப்பட்ட கிராமப்படங்கள் இறுதிக்கிராமப்படங்கள் **(Final Village Plans – FVPs)** எனவும் பிரதேசவியல் ஆரம்பப் படங்கள் இறுதிப் பிரதேசவியல் ஆரம்பப்படங்கள் **(Final Topographical Preliminary plans)** எனவும் அழைக்கப்படும். காணி நிர்ணயத்திற்கான காணி அளவைகள் இப்போது இடம்பெறாத போதும் இன்றும் நிர்ணயம் செய்து முடியாமல் உள்ள காணிகளின் நிர்ணயத்தின் போது ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள நில அளவைப் படங்களில் திருத்தம் செய்யவேண்டியிருப்பின் அவற்றிற்கான பகுப்பளவைகள் நடைபெறுகின்றன.

இச்சட்ட மூலமும் காலத்திற்குக் காலம் சில திருத்தங்களிற்கு உள்ளாகியது. இவ்வாறு காலத்திற்குக் காலம் பல் சட்டங்களைக் கொண்டு வந்ததினதும் திருத்தங்களைக் கொண்டு வந்ததினதும் முக்கிய நோக்கம் அரச காணிகளைப் பாதுகாப்பதேயாகும்.

இச் சட்டத்தின் கீழ் விருத்தி பெற்ற பழைய தோட்டங்கள், மத்திய மலைநாட்டின் பெருந்தோட்ட செய்கைக்காக கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட இடங்கள் காணி நிர்ணயத்திற்கு உட்படாத காரணத்தினால் நிர்ணயத்திற்கான காணி அளவைகள் இடம்பெறவில்லை.

கரையோரப் பிரதேசங்களில் சில இடங்கள், யாழ்ப்பாண குடாநாட்டில் பல பகுதிகள் மற்றும் தெற்கு, மேற்கு மாகாணங்களில் சில பிரதேசங்கள் காணி நிர்ணயத்திற்கு உட்படாததற்கு முக்கிய காரணம் அப்பகுதிகளில் அரச காணிகள் மிகமிகக் குறைவாகக் காணப்பட்டதேயாகும்.

### தனியார் காணிகளில் அரசின் சில நடவடிக்கை சம்பந்தமாக சில கேள்வி, பதில்கள்

என்னிடம் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கேட்ட கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு இக் கேள்வி,பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:-** ஒரு காணி அரச காணி என்று எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது?

**பதில்:-** மேலே 3 கட்டளைச் சட்டங்களைப் பார்த்தோம். அவற்றின் மூலமே காணி நிர்ணயச் செயற்பாடு இடம்பெறுகிறது.

**கேள்வி:-** இம் மூன்று சட்டங்கள் மூலம் மட்டுந்தானா அரச காணிகள் எவை என நிர்ணயிக்கப்படுகின்றன?

**பதில்:-** இல்லை. வேறு பல சட்டங்களின் கீழும் அரச காணிகள் உள்ளன. இதுபற்றி முன்னர் 'ஒரு கட்டுரையில் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன். உதாரணமாக 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் (கையேற்புச்) சட்டத்தின் கீழ் அரசினால் கையேற்கப்பட்ட காணிகள், நீதிமன்ற கட்டளையொன்றின் கீழ் அரசிற்கு உரித்தான காணிகள், புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை மக்கள் தனியார் காணிகள் என்று உரிமை கொண்டாடுவதில்லை. மக்களால் உரிமை கோரப்படாத சகல காணிகளும் அரச காணிகளே.

நீங்கள் உங்கள் ஊரில் பார்த்தீர்களானால் சில காணிகள் சிறு காடுகளாக இருக்கின்றன. அவற்றை மக்கள் தங்கள் காணியென்று உரிமை கொண்டாடுவதில்லை. அவை அரச காணிகளே. அவை கிராமக் காடுகள் என்ற வகைக்குள் அடங்குகின்றன.

(தொடரும்...)

# நயினை நாகபூஷணிக்கு இன்று நான்காம் திருவிழா



## விரட்டிவிடு கொரோனாவை

ஆழிக்கரை நீயிருந்து
ஆதரிக்கும் நயினை அம்மா
நோயொன்று வந்துவிட்டால்
நேர்த்தியொன்று வைப்போம் நாம்
நோய்போகும் இடந்தெரியா
நொடிப்பொழுதில் மாற்றிடுவாய்
கொரோனாவோ வாட்டுதம்மா
கொடுமையாக உயிர்பறித்தே
கோடிமக்கள் இறக்கின்றனர்
கொரோனாவை விரட்டிவிடு
உந்தனால் ஆகுமம்மா
உவந்து நீயும் செய்துவிடு
நயினையின் தாயம்மா
நாங்கள் உந்தன் பிள்ளையம்மா

செல்வி.அ.ஹாஷினி
புத்தூர்.

## நலம் தருவாய்

நலந்தருவாய் நாயகியே
நயினை பதிவாழ் தேவியே
அல்லல் எல்லாம் நீக்கி
ஆண்டருள்வாய் தேவியே
கல்லை நீ காத்த மனம் கரைந்திட
கவலை எலாம் ஓடி பறந்திட
நலம் தருவாய் நாயகியே

வி.குரு
பண்ணாகம்

## அகிலம் காக்கும் தாயே!

அகிலத்தை ஆளும் ஆதிசிவன்
பாதி ஆனவளே
ஆர்ப்பரிக்கும் அலைகடலில் இருப்பவளே
இலங்கை எனும் சிறு தீவினிலே
இருந்து இன்னல்கள் யாவும் தீர்ப்பவளே
ஈகை கொடையாம் அன்னதானத்தில் அமுத
சுரபியாம் சிறந்து விளங்குபவளே
உலகம் போற்றும் அன்னையவள்
நயினை தாயாக காப்பவளே
ஊமை கண்ட கனவுபோல் கலங்குகின்றோம்
ஊர் உலகினை காப்பாயே தாயே
எங்கனும் விளங்குகின்ற சர்வசக்தி தாயே
சர்வேஸ்வரியே சரணாகதியே நான்
ஏளனத்தில் எமை பார்ப்போர்
மத்தியில் ஏழைக்கு அருள்புரி தாயே
ஐங்கரனுக்கு அன்னையே ஐந்து தலைநாகம்
மீது அமர்ந்தவளே
அம்மையே உன்னை வணங்குகின்றோம்
அகிலத்தை காத்திடுவாயே தாயே

நவாலியூர்
ம.லலிதாம்பிகை

# நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 2 ஆயிரத்து 800 எலிக்காய்ச்சல் நோயாளர்கள்

(கொழும்பு)

**வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் சுமார் 2 ஆயிரத்து 800 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில், எலிக்காய்ச்சலால் 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, அநுராதபுரம், பொலநறுவை மற்றும் கேகாலை மாவட்டங்களிலேயே எலிக்காய்ச்சலால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய வாரத்திற்கு ஒருமுறையேனும், உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-8)

# மகிந்தானந்தவின் ஆட்ட நிர்ணயக்குற்றச்சாட்டு; பொய்யாக இருப்பின் சிறைத்தண்டனை வழங்கலாம்

## சட்டத்தரணி பண்டுக கூறுகிறார்

(கொழும்பு)

மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ள ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு பொய் பிரசாரமாக இருந்தால் சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் சட்டத்தின் பிரகாரம் இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கலாம் என விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக கீர்த்தினந்த தெரிவித்தார்.

2011 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியின் போது ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றுள்ளதாக அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ள கூற்று, கிரிக்கெட் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரின் இந்த சர்ச்சைக்குரிய கூற்று தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக கீர்த்தினந்த கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டுக்களில் பிழை, மோசடிகளை தடுக்கும் வகையில் கடந்த 2019 அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் கீழ், தற்போது தெரிவிக்கப்படும் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றிருந்தால் அவர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவின் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு குறித்த சட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற விடயமொன்றாகும்.

என்றாலும் சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் இதில் பிரதானமாக இடம்பெற வேண்டி இருப்பது இந்த கூற்றின் உண்மைத்தன்மை தொடர்பாக தேடிப்பார்ப்பதாகும். ஒரு வேளை, மகிந்தானந்த அளுத்கமகேவின் கூற்று பொய் குற்றச்சாட்டாக இருந்தால், இந்த சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்என அவர்தெரிவித்தார்.(ஜ-4)

# 2011 ஆம் ஆண்டு கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதியில் சொகுசு ஜீப் பெறப்பட்டதற்கான ஆதாரமுள்ளது



## ரஞ்சன் புதிய குண்டு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் இறுதியாட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றது என்பதை மகிந்தானந்த அளுத்கமகே உறுதி செய்துள்ளதால் அது குறித்து விசாரணை நடத்தும்படி சி.ஐ.டி மற்றும் ஐ.சி.சியின் இலஞ்சம் ஒழிப்பு பிரிவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

"நான் இந்த குற்றச்சாட்டுகளை ஒரு பத்திரிகையாளர் சந்திப்பிலும் பல ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்றத்திலும் தெரிவித்தேன். எவ்வாறாயினும் எனது குற்றச்சாட்டை அமைச்சர் அளுத்கமகே இப்போது உறுதிப்படுத்தியுள்ளார்" என்றார்.

"ஐ.சி.சி.ஊழல் தடுப்பு பிரிவின் தலைவரிடம் நான் தெரிவித்த குற்றச்சாட்டுக்களையும் அமைச்சர் அளுத்கமகேவின் புதிய குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்யும்படி அழைக்கிறேன்" அத்துடன் "கிரிக்கெட் உலகக் கிண்ண 2011 இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றது என்பதற்கான சில ஆதாரங்கள் என்னிடமுள்ளன. இதில் தொடர்புள்ள சில நபர்களுக்கு ஆட்ட நிர்ணய சதியின் பரிமாற்றமாக சொகுசு ஜீப்பை பெற்றார்கள் என்பதற்கான ஆதாரம். என்னிடம் உள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஒரு கிலோகிராம் ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

றம்புக்கணை - கேகாலை பகுதியில் ஒரு கிலோ 527 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

றம்புக்கணை - கேகாலை பிரதேசத்தில் ரயில் பாதைக்கு அருகில் உள்ள பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, ஒரு கிலோ 527 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை, கடத்தியமை மற்றும் விநியோகித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேக நபர் ஒருவரும் அதற்கு உதவி புரிந்த பெண் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து 3 கைத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான பொலிஸ் பிரிவினரால் இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# மூவாயிரம் இராணுவத்தைக் கொன்றேன் என்றவர் கைது செய்யப்படவில்லையே

## கேள்வி எழுப்புகிறார் ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் பாதுகாப்பு இருக்கின்ற தைரியத்திலே இராணுவத்தினரை தான் கொலை செய்ததாக பகிரங்கமாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு சகோதர இராணுவ வீரர்களை கொலை செய்த கருணா அம்மானுக்கு எதிராக இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென் மாகாண தேரர்களின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தினார்.**

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனையிறவு இராணுவ முகாமை தாக்கிப் பிடிக்கும்போது தனது கட்டளையின் அடிப்படையில் மூவாயிரம் இராணுவத்தினரை கொலை செய்ததாக கருணா அம்மான் பகிரங்கமாக தெரிவித்துள்ளார். திகாமடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ்வாறான சட்டவிரோத செயலை தான் செய்ததாக பகிரங்கமாக தெரிவித்து இரண்டு நாட்கள் கடந்தும் அவருக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது.



நாட்டின் இராணுவம் என்பது சட்டபூர்வமான படையணியாகும். நாட்டின் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். அவ்வாறானவர்களை சட்டவிரோதமாக கொலை செய்தாலும் அது பாரிய குற்றமாகும்.

அவர் எவ்வாறு அச்சமின்றி இதனை பகிரங்கமாக தெரிவிக்க முடியும்? கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து, பின்னர் இராஜதந்திர நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு, அரச பொறிமுறைக்குள் இணைந்து கொண்டார். பின்னர் கட்சி ஒன்றின் உப தலைவராகவும் பிரதி அமைச்சராகவும் செயற்பட்டார்.

இவ்வாறு இருந்து தற்போது தேர்தலில் போட்டியிடும் இவருக்கு கட்சிகளின் தலைவர்கள் அரச அதிகாரிகளின் ஆசீர்வாதம் இருக்கின்றது. அவர் எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அவரை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையிலே அவர் தற்போது இவ்வாறான பயங்கரமான கூற்றை அச்சமின்றி தெரிவித்துள்ளார். தனது நாவினாலே இந்த குற்றத்தை தெரிவிக்கும் கருணா அம்மானுக்கு எதிராக சட்டமா அதிபர் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார் என கேட்கின்றேன். இராணுவ வீரர்களை கொலை செய்ததாக தனது நாவினாலே தெரிவிக்கும் போது அதற்கு வேறு சாட்சியங்கள் எதற்கு?

அதனால் நீதித்துறையின் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ள கருணா அம்மானை உடனடியாக கைதுசெய்யவேண்டும். என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டில் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி பணவீக்கம் ஏற்பட வாய்ப்பு

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து பணவீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கியால் கடந்த செவ்வாய்க்கிழமை 115 பில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

குறித்த பணம் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்குக் குறைந்த வட்டி அடிப்படையில் கடன்களை வழங்குவதற்காக அச்சிடப்பட்டுள்ளது



எனவும் மக்கள் வங்கி அல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தப் பொருளாளரால் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இந்தியாவிலிருந்து 230 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

இந்தியாவில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இலங்கையர்கள் உட்பட 230 பேர் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்தியாவின் டில்லி நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிப் பயணித்த இந்திய விமான சேவைக்கு சொந்தமான ஏ.ஐ 281 எனும் விமானத்தில் குறித்த அனைவரும் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர். இந்தியாவில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இலங்கையர்கள் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள சர்வதேச கப்பலொன்றில் பணியாற்றும் இந்திய கடற்படையினர் உள்ளிட்டவர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர். இந்நிலையில் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.(ஜ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாதத்திறமை

குற்றம்சாட்டப்பட்ட ஒருவர் குற்றவாளிக்கூண்டில் ஏறி நிற்கிறார். அவர் குற்றவாளியா? இல்லையா? என்பது இனிமேல்தான் நிரூபணமாகும். அதனால் அவர் தரப்பில் பேசும் போதும் வாதாடும் போதும் மிகவும் சாமர்த்தியமாகவும் ஜாக்கிரதையாகவும் பேச வேண்டியிருக்கும். ஏனென்றால் நிரபராதிக்கு தண்டனை கிடைக்கக்கூடாது என்பதற்காக.

அவரின் மேல் தவறு இல்லை என்பதுபோல் ஒரு சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும் அதை அவருக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வதற்குத்தான் சட்டம் முயற்சி செய்யும்.

இப்படி இருப்பதனால்தான் சில வழக்கு விசாரணைகள் மிகவும் சுவாரஷ்யமாக அமைந்துவிடுவதும் உண்டு. வாதாடுவதைப் பார்த்தால் மிகவும் சாமார்த்தியமாக இருக்கும்.

ஒருவர் ஏதோ தவறு செய்து வசமாக மாட்டிக்கொண்டான். பொலிஸார் விசாரணை செய்தார்கள். அவன்தான் குற்றவாளி என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. அதற்கான ஆதாரங்களும் கிடைத்தன, சாட்சிகளும் இருந்தன.

வழக்கு நீதிமன்றிற்கு வந்தது. அவன் சார்பில் ஒரு சட்டத்தரணி வாதாடினார். தன்னுடைய கட்சிக்காரரைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்பினார். அதற்காக மிகவும் சாமர்த்தியமாக என்னென்னவோ குறிப்புக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி வாதாடி என் கட்சிக்காரர் நிரபராதி என்று சொன்னார்.

இருந்தாலும் பொலிஸ் தரப்பில் சாட்சியங்கள், குற்றவாளிக்கு எதிரான ஆதாரங்கள் மிகவும் வலுவாக இருந்தன. அதனால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

கடைசியாக அவரைக் காப்பாற்றுவதற்கு ஒரேயொரு வழிதான் இருந்தது. உடனே சட்டத்தரணி நீதிபதியைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

கனம் நீதிபதி அவர்களே, குற்றம் செய்தது எதுவாக இருந்தாலும் சரி, அல்லது எவராயிருந்தாலும் சரி அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் அல்லவா என்று கேட்டார்.

உடனே அந்த நீதிபதியும் ஆமாம், உண்மைக் குற்றவாளிகள்தான் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

உடனே அடுத்தபடியாக அந்தச் சட்டத்தரணி, நீதிபதி அவர்களே இந்தக் குற்றத்தைச் செய்தது என் கட்சிக்காரர் இல்லை. அவருடைய கைதான் அந்தக் குற்றத்தைச் செய்தது என்று வாதாட ஆரம்பித்தார்.

நீதிபதி இதைக் கேட்டவுடன் யோசிக்க ஆரம்பித்தார்.

அது எப்படி? கைதான் தவறு செய்தது என்றால் அந்தக் கையை மட்டும் எப்படித் தண்டிக்க முடியும்? கையைத் தண்டிப்பது என்றால் அந்தக் கைக்கு உரியவரையும் சேர்த்துத்தானே தண்டிக்க முடியும் என்று யோசனை செய்தார். இருந்தாலும் சாமர்த்தியமாக வாதாடும் அந்தச் சட்டத்தரணியிடம் சிறிது விளையாடிப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

உடனே சட்டத்தரணியைப் பார்த்துச் சொன்னார். உண்மைதான். உண்மையிலேயே அந்தக் கைதான் அந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறது என்று சொன்னால், குறிப்பிட்ட அந்தக் கைதான் தண்டிக்கப்படவேண்டும். அதனால் கையை உடம்பிலிருந்து தனியாக எடுத்துத் தண்டனை கொடுக்கலாம் என்றார்.

ஆம், நீதிபதி அவர்களே என்று சொல்லிக்கொண்டு ஆசனத்தை விட்டு எழுந்தார் அந்தச் சட்டத்தரணி. நேராக அவருடைய கட்சிக்காரர் நின்று கொண்டிருந்த இடத்துக்குப் போனார். அவருடைய கையை தனியாக எடுத்துக்கொண்டு வந்து நீதிபதியிடம் கொடுத்து சட்டப்படி இந்தக் கைக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ அதையே நீங்கள் கொடுக்கலாம் என்றார்.

அப்பொழுதுதான் விடயம் புரிந்தது. அந்த ஆளுக்கு ஏற்கனவே ஒரு கை கிடையாது என்பது. அவர் வைத்திருந்தது செயற்கைக்கை. மரக்கட்டை மாதிரி.

இதுதான் வாதத்திறமை. இருந்தாலும் குற்றவாளி தண்டனையிலிருந்து தப்ப முடியாது. சில சமயம் குற்றவாளிகளிடம்கூட இந்த வாதத்திறமை இருக்கும். ஆனால் அது வேறுவிதமாக இருக்கும்.

கிராமத்தில் ஒருமுறை 100 ரூபாய் திருட்டுப் போய்விட்டது. ஒருவர் மேல் சந்தேகம். அழைத்து விசாரித்துப் பார்த்தார்கள். கடைசியிலே கிராமத்தலைவர் அந்த ஆளைப் பார்த்துச் சொன்னார். உன் மேல் எந்தக் குற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ நிரபராதி என்று பஞ்சாயத்தில் முடிவு செய்கிறோம். நீ போகலாம் என்றார். சரி என்று புறப்பட்டவன் ஏதோ சந்தேகத்தில் திரும்பிப் பார்த்து, அப்படியென்றால் அந்த 100 ரூபாயை நானே வைத்துக் கொள்ளலாமா? என்று கேட்டான்.

மிகவும் உண்மையான ஆள்.

# ஜனாதிபதி முன்னெடுக்கும் பயணத்தை எவராலும் மாற்றியமைக்க முடியாது

## லங்காராம விகாராதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் இப்பயணத்தை எவராலும் மாற்ற முடியாதென அநுராதபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க லங்காராம விகாராதிபதி ரலபனாவே தம்மஜோதி தேரர் தெரிவித்தார்.**



பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தூற்றிக்கொள்ளும் அரசியல் மேடைகளுக்கு அப்பால் தமது கொள்கையை மிகச் சரியாகவும் அச்சமற்றும் முன்வைத்த ஒரேயொரு தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவே என தேரர் புகழாரம் சூட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரலாற்று சிறப்புமிக்க லங்காராம விகாரைக்கு சென்று விகாராதிபதி ரலபனாவே தம்மஜோதி நாயக்க தேரரை சந்தித்தபோதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசீர்வதித்த தம்மஜோதி தேரர், நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி வைத்தார்.


லங்காராம வரலாற்று சிறப்புமிக்க பௌத்த விகாரையை வழிபட்டதன் பின்னர் ஜனாதிபதி, மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டார். (ஜ-4)

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தேர்தலுக்கு வருகை தருவார்களா?

## இரு வாரங்களின் பின்னரே தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை முன்னிட்டு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வருகை தருவார்களா? என்பது தொடர்பில் எதிர்வரும் இரண்டு வாரங்களின் பின்னரே தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் சட்டதிட்டங்களை பாதுகாப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் கண்டி மாவட்ட அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-8)

# கருணா அம்மான் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க உத்தரவு

(கொழும்பு)

கருணா அம்மானால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு மேலதிக பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வு பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கருணா தன்னால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்கள் குறித்து, வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பிலே இவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஜ-8)

# லீசிங் நிறுவனங்களில் முறைகேடுகள்; மக்கள் இன்று முதல் முறையிடலாம்

(கொழும்பு)

நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியவுள்ளது. பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதனை தவிர, குழுவின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக மேலதிகமாக 2 நாட்கள் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை ஆணையாளர் நாயகம், சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

மக்கள் இது குறித்த யோசனைகள், கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி, கொழும்பு-1 எனும் முகவரிக்கும் அனுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள நிதி நிறுவனங்களில் இடம்பெறும் கொடுக்கல்-வாங்கல்களின் போது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர்பிலும் இந்தக் குழு ஆராய்ந்து பரிந்துரை செய்யவுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# செய்தித்துளிகள்

## சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கம் காரணமாக வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது அதற்கான கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி மார்ச் 13 முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜூன் 30 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 3 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## வெளிநாடு சென்று நாடு திரும்பியோர் தொடர்பில் ஆய்வு

(கொழும்பு)

தொழில் நிமித்தம் வெளிநாடு சென்று நாடு திரும்பியவர்கள் தொடர்பில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் தரவுகள் சேகரிக்கப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது. கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதி வரை சுமார் 7 ஆயிரம் தொழிலாளர்கள் நாடு திரும்பியுள்ளதாக பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார். கொரியா, இத்தாலி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெருமளவானோர் நாடு திரும்பினர்.

ஏப்ரல் 17 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பி கொரோனா அச்சம் காரணமாக மீண்டும் தொழிலுக்கு திரும்ப முடியாமல் இருக்கும் பணியாளர்கள், 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ஜ-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 50 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 170 | 150 |
| தக்காளி | 160 | 240 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 140 | 130 | 130 | 140 |
| கரட் | 120 | 170 | 170 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 220 | 280-300 | 240 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 180 | 230 | 200 | 280 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 | 160 |
| பீற்றூட் | 120 | 130 | 120 | 120 |
| கறிமிளகாய் | 160 | 80 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 450 | 600 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | — | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-60 | 40-60 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 160 | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 90 | 50-60 | 80 |




# சத்தியமே வெல்லும்



அக்பருடைய சபையில் இருந்தவர்கள் அனைவரிலும் பீர்பால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார். இதனால் பீர்பால் மீது சபையில் பலர் பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள், பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்றுகூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர். அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கி விட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற, தாவூத் என்பவர் பீர்பாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீர்பாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்பமாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால் சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக் கூறினார். உடனே மற்றவர்கள் தாவூத்தை உற்சாகப் படுத்தினர்.

"என் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான் மட்டும் தாமதமாக வருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்து விட்டார். அது அவருடைய மனத்தை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லிவிடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்தப்பின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீர்பால் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்து விட்டனர். தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையைச் செலுத்தினார்.

அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத் இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார். "ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல் சோர்ந்து விட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர். சற்றுநேரத்தில் தாவூத்தே வந்து சேர்ந்து விட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத்.

"அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்றவாளி?" என்று அக்பர் சீறினார்.

"அதை எப்படி என் வாயால் சொல்வேன்பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால் உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடகமாடினார்.

"சட்டத்தின் முன் அனைவரும் சமம் அவன் யாராயிருந்தாலும் சரிதான் அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு உங்களுடைய பீரபால்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார். பீரபாலும் அதிர்ச்சியுற்றார். ஆனால் பீர்பால் உடனே விடயத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்து விட்டது.

"என்ன பீர்பாலா?" என்று மிகுந்த வியப்புடன் அக்பர் கேட்டார். "ஆம், பிரபு! நான் என் கண்களினால் கண்டதைச் சொல்கிறேன்! நேற்று மாலை நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், எனக்கு சற்றுத் தொலைவில் பீர்பால் வந்து கொண்டிருந்தார். திடீரென அவர் குனிந்து தரையில் கிடந்த ஒரு தங்க மாலையைப் எடுத்தார். பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்று சுற்று முற்றும் பார்த்தபின் மாலையைத் தன் பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து அங்கு மிகுந்த பதற்றத்துடன் வந்த ஓர் இளைஞன் "என் தங்க மாலை வழியில் இங்கே எங்கோ விழுந்து விட்டது. அதைப் பார்த்தீர்களா?" என்று எல்லாரையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் உண்மையைச் சொல்ல நினைத்தேன். அதற்குள் அவன் அங்கிருந்து சென்று விட்டான்" என்று தாவூத் அழகாகத் தான் கற்பனை செய்து வந்த கதையைக் கூறினார்.

அக்பர் கோபமாக, "பீர்பால், இவர் உன்னைப் பற்றிக் கூறுவது உண்மையா?" என்று கத்தினார். "இல்லை பிரபு நான் மாலை நேரத்தில் அங்கு வந்தது உண்மை ஆனால் இவர் குறிப்பிட்டது போன்ற சம்பவம் எதுவும் அப்போது நிகழவில்லை" என்றார் பீர்பால்.

"பிரபு! பின் நான் என்ன பொய்யா சொல்கிறேன்? பீர்பால் மறைக்கிறார். நான் சொல்வது சத்தியம்!" என்றார் தாவூத்.

"பீர்பால் எடுத்ததை நிரூபிக்க வேறு சாட்சிகள் இல்லாதபோது, நீ கூறுவதை நான் எப்படி நம்ப முடியும்?" என்று அக்பர் தாவூத்தை கேட்டான்.

"அதற்கு ஒரு சோதனை செய்து பார்க்கலாம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை நான் எடுத்து வருகிறேன்.

அதை தன் கையில் பீர்பால் பிடித்துக் கொள்ளட்டும். அவர் சத்தியவான் என்பது உண்மையானால், அந்தக் கம்பி அவரைச் சுடாது!" என்றார் தாவூத்.

அதைக் கேட்ட பிறகு பீர்பாலின் பக்கம் திரும்பிய அக்பர், "பீர்பால், நீ இந்த சத்திய சோதனைக்கு உட்பட்டேயாக வேண்டும்! நீ ஒரு நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டு! நீ சொல்வது சத்தியம் என்பதை அப்போது தான் எல்லாரும் நம்புவார்கள்" என்றார்.

பீர்பாலின் மூளை வெகு விரைவாக வேலை செய்தது. உடனே அவர், "பிரபு! அந்த சத்திய சோதனைக்கு நான் தயார்! ஆனால் என் மீது குற்றம் சாட்டும் தாவூத்தும் தான் சொல்வது சத்தியம் என்பதை நிரூபிக்க வேண்டும்" என்றார்.

"அது எப்படி? அவர் என்ன செய்ய வேண்டும்?" என்று அக்பர் கேட்டார். "பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை தாவூத் முதலில் தன் கைகளில் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு என்னிடம் தர வேண்டும்!" என்றார் பீர்பால்.


அதுகேட்டு, அடிபட்ட நாயைப் போல் தாவூத் வீல் என்றுகத்தினார். "ஐயோ! அது என்னால் முடியாது!" என்று அலறினார். "ஏன் முடியாது? நீ சொல்வதை நிரூபிக்க நீயும் அந்த சோதனைக்கு ஆளாக வேண்டும்" என்றார் பீர்பால்.

உடனே தாவூத் அக்பரை நோக்கி, "பிரபு! என்னை மன்னித்து விடுங்கள்! சங்கிலியை எடுத்தது பீர்பால் இல்லை. நான் தவறாகச் சொல்லி விட்டேன்" என்று கூறி அவர் கால்களில் விழுந்து புலம்பினார்.


"பீர்பால் மீது பொய்க்குற்றம் சாட்டிய இந்த அயோக்கியன் தாவூத்தை சிறையில் அடையுங்கள்" என்று காவலர்களுக்கு உத்தரவிட்ட அக்பர், பிறகு பீர்பால் பக்கம் திரும்பி, "என்னை மன்னித்து விடு பீர்பால்! நான் கூட உன்னை ஒருகணம் சந்தேகப்பட்டு விட்டேன்" என்றார்.

---


## சதுரத்திற்குள் வரவேண்டிய இலக்கத்தை கண்டுபிடியுங்கள்




## நிறம் தீட்டுங்கள்



## கூட்டுங்கள்



பேசாதே, செயல்படு இதை உன் மனதில் குறித்துக் கொள். வார்த்தைகள் ஒருபோதும் தேவை இல்லை. செயலே வாழ்வின் ஆதாரம். -ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உறங்குகின்ற கும்பகர்ண எழுந்திராய் எழுந்திராய்...

சீதையைச் சிறைப்படுத்தியதன் காரணமாக இலங்கை மீது போர் தொடுக்க இராமர் சேனை வருகிறது.

இராமருக்குத் துணையாக வானரக் கூட்டம் ஆர்ப்பரிக்கிறது.

தன் சகோதரர்களையும் மகனையும் நம்பி இராவணன் போருக்குத் தயாராகிறான்.

கும்பகர்ணன் நித்திரை வரம் பெற்றவனாதலால் அவன் உண்பதும் உறங்குவதுமாக இருக்கிறான்.

போர் முரசம் கொட்டுகிறது. அரண்மனை வீரர்கள் உறங்குகின்ற கும்பகர்ணனை எழுப்புகின்றார்கள்.

உறங்குகின்ற கும்பகர்ண எழுந்திராய் எழுந்திராய்... என அந்தக் காட்சியை கம்பன் அழகுபடுத்துவான்.

அந்தோ! தம்பி வீபூடணன் இராமர் பக்கம் போய் விடுகிறான். என்ன செய்வது போரில் இராவணேஸ்வரன் தோற்றுவிடுகிறான்.

ஆக, இராமாயண காப்பியம் இயக்கர், நாகர் பரம்பரைக்கு ஒரு தத்துவத்தைக் கூறி நிற்கிறது.

அதாவது மாற்றானுடன் சேர்வதும் நடப்பது என்ன என்பது பற்றி அறியாமல் உறங்குவதும் இயக்கர், நாகர் பரம்பரைக்கு அழிவாக அமைந்து விடும் என்பதே அத்தத்துவமாகும்.

ஆகையால் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்ற பெருமைக்கும் ஆண்ட பரம்பரை என்ற வரலாற்று உண்மைக்கும் உரித்தான பெருமக்களே! தமிழ் மக்களே! நாட்டில் நடப்பதை அறியுங்கள். நமக்கென்ன என்று இருந்து விடாதீர்கள்.

பொய்யும் புனைவும் உங்களைக் காவு கொண்டுள்ளது. உறக்கம் எனும் மாயைக்குள் வீழ்ந்து விட்டால் விழிப்பு ஏது? வாழ்க்கையில் வெளிச்சம் ஏது? வசந்தம் ஏது? அமைதி ஏது? எங்கும் துன்பமே என்றாகிவிடும்.

ஆகையால், வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல எழுமின், விழிமின் எண்ணிய கருமம் நிறைவேறும் வரை உழைமின் என்பதை உங்கள் தாரக மந்திரமாய் கொள்ளுங்கள்.

அதோ! தேர்தல் முரசு கேட்கிறது. களத்தில் உங்கள் பெயரைக் கூறியவாறு கோசம் போடுகின்ற கூட்டங்கள்.

அதற்குள் ஊஸ்டியிடுதலும் கொக்கரிப்புகளும் அலறல்களும் கேட்கின்றன.

ஆனாலும் அதற்குள்ளும் அவதாரம் இருக்கவே செய்யும்.

அவதாரம் என்று நினைத்து அவலத்தைத் தொட்டு விடாதீர்கள். நின்று நிதானமாகச் சிந்தியுங்கள்.

விழித்தெழுங்கள். தேர்தல் முறைமையை அறிந்து கொள்ளுங்கள். போட்டியிடுபவர்கள், அவர்களின் சின்னங்கள், வாக்களிப்பு முறைகள் என அனைத்தையும் கேட்டறியுங்கள்.

தண்ணீருடன் கலந்த பாலைப் பிரித்தெடுக்கும் ஞானம் எமக்கு இல்லையென்றாலும் பரவாயில்லை. அன்னத்தையும் கழுகையும் இனங்காணும் அவதானத்தையேனும் செலுத்துங்கள். உங்கள் கருசனை தமிழினத்துக்கு பக்கபலமாய் அமையும்.

# ஜனாதிபதியின் செயற்பாடு சிறுவர்களுக்கு ஒரு துரதிர்ஷ்டமான முன்னுதாரணமாகும்

## மங்கள குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி, மத்திய வங்கியின் அதிகாரிகளை மோசமாக கண்டித்தமை, இலங்கையின் எதிர்கால சிறுவர்களுக்கு ஒரு துரதிர்ஷ்டமான முனனுதாரணமாகும் என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது," கடந்த 70 வருட இலங்கை வரலாற்றில் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகளின் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல் இதுவாகும்.

மத்திய வங்கியின் அதிகாரிகளை ஜனாதிபதி இழிவான முறையில் பகிரங்கமாக அவமானப்படுத்தியது, அவர்களை கொடுமைப்படுத்துவதற்கு ஒப்பான செயலாகும்.

மேலும் அரச அதிகாரிகளுடன் சேவை அடிப்படையில் திருப்தியின்மை இருப்பின் அதனைத் தனிப்பட்ட ரீதியில் விளங்கப்படுத்த முடியும். குறிப்பாக அவர்களுக்கு மரியாதை வழங்கப்படுவது அவசியம்.

இது இலங்கையின் எதிர்காலமான சிறுவர்களுக்கு ஒரு துரதிர்ஷ்டமான முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

அந்தவகையில் பிரதமரும், நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ இதனைப் பற்றி கண்டு கொள்ளவில்லை என்பதால் மத்திய வங்கி அதிகாரிகளுக்காக குரல் கொடுக்க வேண்டியது எங்களது கடமை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

## இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு பிரத்தியேக வாக்களிப்பு நிலையம்

(கொழும்பு)

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிக்க பிரத்தியேக வாக்களிப்பு நிலையம் ஒன்றை ஸ்தாபிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள ஊழியர்களை தெளிவுபடுத்தும் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில், வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகளில் பணம் கொடுத்து செய்யப்படும் விளம்பரங்களை தனக்கு தடுக்க அதிகாரம் இல்லை.

எனவே வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் ஒளி, ஒலிபரப்பாகும் செய்திகளில் வேட்பாளர்களுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-8)

## குப்பைத் தொட்டிகளும் பொலித்தீன் பைகளும் வழங்கக் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை பதினொரு வட்டாரங்களிற்கும் குப்பைத் தொட்டிகளை வழங்குமாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்ஷன் வேள்ட் விஷன் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். வேள்ட் விஷன் நிறுவனம் சாவகச்சேரி நகர சபையுடன் இணைந்து கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மூன்று வருடங்கள் செயலாற்றி வருகிறது. இந்நிலையில் நகரசபை உறுப்பினர் நிறுவனததிடம் குறித்த கோரிக்கையை முன் வைத்திருந்தார். பதினொரு வட்டாரங்களின் முக்கிய இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைக்க உதவுவதுடன், நகரசபை எல்லைக்குட்பட்ட சகல வீடுகளுக்கும் குப்பைகளை தரம் பிரித்து வைக்கக்கூடிய வகையில் மூன்று பொலிதீன் பைகளையும் வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (4-5-30)

## ஐ.தே.க.உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கும் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கும் முடிவினை இடைநிறுத்தக் கோரும் கோரிக்கையினை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்தது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்திருந்த மனுவைப் பரிசீலித்த கொழும்பு நீதிமன்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கட்சி விதிகளை மீறிச் செயற்பட்டமைக்காக 99 உறுப்பினர்களை தமது கட்சியிலிருந்து நீக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது. சமகி ஜன பலவேகய கட்சி சார்பில போட்டியிடுவதற்கு குறித்த உறுப்பினர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தமை தொடர்பாகவே ஐக்கிய தேசியக் கட்சி குறித்த முடிவினை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உன்னையே உன்னால் அடக்கி ஆள முடியாவிட்டால் ஒருபோதும் உன்னால் மற்றவர்களை அடக்கி ஆள முடியாது. -ஸ்ரீ அரவிந்தர்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி புதனகிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** துட்டுவாகை ஒரு பகுதி, கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், புளிதறித்த புளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** வட்டுபித்தன்மடு, புதுக்காமம், முள்ளிப்பழம, தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவமுகாம்டய லொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், மாலுவாடி, New Silk Road Aquatic Company PVT (Ltd) ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தியானம்



இயற்கைக்கு அடிமையாக இருப்பதை எதிர்க்க உதவும் சக்தியே தியானம். இயற்கையினால் ஏற்படும் தளைகளைத் தியானத்தால் நிச்சயமாக மாற்றி விட முடியும்.

இந்த ஆற்றல் உங்களிடமிருந்தால் அதுவே சுவர்க்கம். அதுவே விடுதலை அல்லவா? அதுவே தியானத்தால் பெறும் ஆற்றல்.

இந்த ஆற்றலை எப்படிப் பெறுவது? இதை வெவ்வேறு முறைகளில் பெறமுடியும்.

ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வழியில் செல்லும். ஆயினும் பொதுவான நியதி இதுதான். மனத்தின் எண்ண அலைகளை அடக்குங்கள்.

மனம் நீர் பெருகிய ஓர் ஏரி போன்றது. அதில் விழும் ஒவ்வொரு கல்லும் அலைகளை எழுப்புகிறது. இந்த அலைகளால் எமது பிம்பம் ஏரியின் நீரில் பிரதிபலிக்கிறது. (தொடரும்)

# மகாஜன கல்விசாலை நிறுவுநர் பாவலர் துரையப்பாபிள்ளை நினைவுதினம்

யா/ மகாஜனக் கல்லூரியின் நிறுவுநரும் முதல் அதிபருமாகிய பாவலர் துரையப்பாபிள்ளை என்னும் சிந்தனையாளரின் நினைவுதினம் (24.06.2020) இன்றாகும். கிராமப்புற மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யவும் சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் கூடி கல்வி மரபிற்கு புத்துயிர் ஊட்டவும் தெல்லிப்பழை பிரதேசத்தில் வயல்வெளிகள் சூழ்ந்த அம்பனைக் கிராமத்தில், இன்று பெருவிருட்சமாக கல்வி ஒளியூட்டும் மகாஜனக் கல்லூரிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை 1910.10.14 அன்று அடிகோலினார்.

இன,மத வேறுபாடின்றி எல்லா மக்களும் கல்வி கற்கலாம் என்ற பரந்த நோக்கோடு 'மகாஜன' என்ற நாமத்தை தாம் தொடக்கிய கல்விச்சாலைக்கு சூட்டினார். ஆங்கிலேயர் ஆட்சியில் பல சவால்களை எதிர்கொண்டே மகாஜனக் கல்லூரியை வளர்த்தெடுத்தார். பாவலர் 1929.06.24 இல் அமரத்துவமடைய அவரது சகலனும் கவிஞருமாகிய சின்னப்பா கல்லூரியை பொறுப்பெடுத்து தளரவிடாது நடத்தி வந்தார். கவிஞர் சின்னப்பா 1945 இல் இயற்கை எய்த, பாவலரின் மகனும் ஆசிரியருமாகிய ஜயரத்தினம் கல்லூரியின் அதிபரானார். இவரது காலத்தில் மகாஜன கல்வி, விளையாட்டு, கலாசாரம் என பலதுறைகளிலும் பரிணமித்தது. தந்தையார் பாவலரின் கனவிற்கு தனயன் ஜயரத்தினம் செயல் வடிவம் கொடுத்தார்.

சமூக சிந்தனையாளரான பாவலர் துரையப்பாபிள்ளை மகாஜன என்ற கல்விக் கூடத்துடன் மட்டும் தனது பணியை நிறுத்திவிடாது புதிய நல்ல சிந்தனைகளை மக்களிடம் புகுத்தினார். மகாகவி பாரதியாரின் சமூக சிந்தனைகளை நோக்கிய கவிதைகளுக்கு முன்னரே, பாவலர் ஈழத்தில் கவிதைகள் ஊடாக சமூகத்தை நல்வழிப்படுத்தும் கருத்துக்களை விதைத்தார். சமூகத்தில் புரையோடியிருந்த சாதிப்பிரச்சினை, விவசாயிகளின் வேதனை, பெண் கல்வி, ஜீவகாருண்யம், தமிழ் மொழியின் மகத்துவம், ஆங்கிலக் கல்வியின் அவசியம் என்பன தொடர்பாக விழிப்பூட்டினார். இலக்கண–இலக்கியக் கையேடு, தொழில் கல்வி, விஞ்ஞானக்கல்வி, உயர் கல்வி என்பவற்றின் அவசியம் தொடர்பான சிந்தனைகளையும் பாவலர் விதைக்கத் தவறவில்லை.

பாவலரின் உயரிய சிந்தனையும் நவமகாஜன சிற்பி ஜயரத்தினத்தின் ஆத்மார்த்தமான அற்பணிப்பும் இன்றுவரை மகாஜனக் கல்லூரியை வழிநடத்தி வருகின்றன. நவமகாஜன சிற்பியின் காலம் மகாஜன வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. நகரப் பாடசாலைகளுக்கு நிகராக பொறியியல், மருத்துவத் துறைக்கு மாணவர்களை அனுப்பியது மகாஜன. கல்விக்கு நிகராக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மகாஜன ஒளிர்ந்தது. இலங்கை கலைக் கழகம் தேசிய மட்டத்தில் நடத்திய நாடகப் போட்டியில் 1965–1969 வரை தொடர்ச்சியாக 5




அமரர்.
பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை

வருடங்கள் முதலாமிடம் பெற்றுச் சாதனை படைத்தது. இதே போல விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் (J.S.S.A) மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனவின் முதலாம் பிரிவு அணி 1967–1974 வரை தொடர்ச்சியாக 8 வருடங்கள் சம்பினாக வலம் வந்தது.

பாவலரின் சிந்தனையில் உதித்து , தனயன் நவமகாஜன சிற்பி ஜயரத்தினத்தினால் புடம் போடப்பட்ட மகாஜனக் கல்லூரியானது, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு இன்று வரை நகரப் பாடசாலைகளுக்கு நிகராக பல்துறைகளிலும் மிளிர்கின்றது. இன்று நாட்டில் மாற்றமடைந்துவரும் கல்வி நடைமுறைகளுக்கும் போக்குகளுக்கும் ஏற்ப தன்னை தயார்படுத்தி சிறந்த கல்விப் பணியாற்றுகின்றது மகாஜன.

மகாஜன விளையாட்டுத் துறையில் தனக்கென தனியிடம் பெற்று விளங்குகின்றது. மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை நிலையில் விளங்குவதோடு, தேசிய மட்டத்தில் வருடாவருடம் கணிசமான பதக்கங்களையும் பெற்று வருகின்றது. மகாஜனவின் துடுப்பாட்டமும் நகரப் பாடசாலைகளுக்கு நிகராக வளர்ந்துள்ளது. உதைபந்தாட்டத்தில் துரித வளர்ச்சி பெற்றுள்ளது. 2018 இல் முதலாம் பிரிவு ஆண்கள் அணியும் 2019 இல் பெண்கள் அணியும் தேசிய சம்பியன்களாக வலம் வந்து உச்சம் தொட்டுள்ளன. இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் போட்டிகளிலும் மகாஜன பல வெற்றிக் கிண்ணங்களைப் பெற்று வருகின்றது.

பாவலர் துரையப்பாபிள்ளையின் நினைவு தினம் வருடாவருடம் "நிறுவுநர் நினைவு தினமும் சிரேஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்" என வெகு விமர்சையாக நடத்தப்பட்டு வருகின்றமை வழமை. இது மகாஜனன்கள் நிறுவுநருக்கு செய்யும் கைமாறாகும். உலகமெங்கும் பரந்து வாழும் மகாஜனன்களும் பழைய மாணவர் சங்கங்களும் கல்லூரியின் வளர்ச்சியில் கொண்டிருக்கும் அக்கறையும் பங்களிப்பும் மிக உன்னதமானதாகும் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆனால் இன்று பாவலரின் 91 ஆவது நினைவுதினம் COVID-19 பிரச்சினையால் மிக அமைதியாக நினைவுகூருதலுடன் மட்டும் நடைபெறுகின்றது. இன்றைய உன்னதமான நாளில் சமூக அக்கறை கொண்டுசெயற்பட்ட சிந்தனையாளர் பாவலர் துரையப்பா பிள்ளையை நாமெல்லோரும் போற்றித்துதிப்போம்.

க.வசந்தரூபன்
பிரதி அதிபர்
யா/மகாஜனக்கல்லூரி.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2056

### தபோதரன்




### மாதுரி




### கெங்காதரன்




### யதீஸ்




### தமிழினி




### சோபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## நயினாதீவு...

பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் உடனடி விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கோபுர வாசலில் பாதணிகளுடன் பொலிஸார் மற்றும் கடற்படையினர் நடமாடிய விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமருக்கு நேற்று முன்தினம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவதானம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு நேற்று பணிப்புரை விடுத்தார்.

குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், இவ்வாறான சம்பவங்கள் இனி நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் வட பிராந்தியத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நேற்றுக் காலை உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் தமது வருத்தத்தைத் தெரிவித்துள்ள சம்பந்தப்பட்ட படையினர், இந்த விடயம் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்றல்ல எனத் தெரிவித்ததுடன், இனி இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாது எனவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## பலமான அரசாங்...

படுத்தும் அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். தேசிய அரசாங்கத்தைப் போன்று பலவீனமான அரசாங்கம் தோற்றம் பெறுவது பயனற்றதாகும். பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யும் எவ்வித கொள்கை திட்டங்களும் எதிர் தரப்பினரிடம் கிடையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

. குருநாகல், வதுராகல பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கம்பலவீனமானது. இரண்டு தலைவர்களும் முரண்பட்டுக் கொண்டமையினால் முழு அரச செயலொழுங்கும் பலவீனமடைந்தது.

இவ்வாறான நிலைமையினையே மீண்டும் தோற்றுவிக்க ஐக்கிய மக்கள் சக்தியினர் முயற்சிக்கிறார்கள். தேசிய அரசாங்கத்தைப் போன்று முரண்பட்ட அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற்றால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவார்கள்.

பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றி பலமான அரசாங் கத்தை ஸ்தாபிப்பதே எமது பிரதான இலக்கு. ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் ரீதியில் மக்கள் எடுத்த தீர்மானத்தை பொதுத் தேர்தலில் எடுத்து பலமான அரசாங்கத்தை தோற்றுவிக்க வேண்டும் என்றார். (ஞா)

## ரயிலுடன் மோதி...

மைல் கல்லுக்கு அண்மையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை புகையிரதத்துடன் மோதி மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சமூக சேவையாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் செயலாளராக கடமையாற்றிய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆ.ரகுசங்கர் (வயது-43) என தெரியவந்துள்ளது.

சடலம் மடுப் புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பறையனாளன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-285,299)

## மரணச்சடங்கில்...

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் மடத்தடிப்பகுதியில் மரணச் சடங்கு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணச் சடங்கில் இரு தரப்புக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. குறித்த வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அது வாள்வெட்டுச் சம்பவமாக மாறியுள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய்ப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஞா-18,32)

## மட்டக்களப்பில்...

மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளர் ஆர். சசீலன் தலைமையில் நடைபெற்ற வாக்கெண்ணும் பரீட்சார்த்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா மேற்பார்வையிட்டார்.

வாக்கெண்ணும் ஊழியர்கள் பிரதம உள்ளக கணக்காய்வாளர் இந்திராவதி மோகனின் நெறிப்படுத்தலில் வாக்குகளை தரம் பிரித்து எண்ணும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டனர்.

வாக்குச்சீட்டின் அளவுக்கு ஒப்பான மாதிரி வாக்குச்சீட்டினை பயன்படுத்தி இந்த ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய்த்தொற்று காரணமாக பாதுகாப்பு அம்சங்களுடன் சமூக ஆள் இடைவெளியினை பேணியவாறு இந்த பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## விபத்தில் படு...

இடம்பெற்ற விபத்து சம்பவமொன றில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கரணவாய் தெற்கைச் சேர்ந்த கோணரஞ்சன் மதுசன் (வயது-20) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்னால் இருந்து சென்று கொண்டிருந்தபோது தூக்கி வீசப்பட்டு தலைப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-60)

## பளைப் பகுதியில்...

சந்தேகத்தில் இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரையும் கொடிகாமம் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரையுமே இராணுவத்தினர் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

. மேலும் இந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா)

## வாக்குறுதியில்...

வதற்கான பேச்சுவார்த்தைகளின்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முன்வைக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது என்பதே ஆகும். ஆனால் குறித்த வாக்குறுதியில் இருந்து இலங்கை பின்வாங்கியுள்ளது.

கடந்த 2015 ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு முன்னேற்றமே ஏற்பட்டது' என குறித்த அறிக்கையில் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஞா)

## பிளவுபட்ட உலகத்...

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கெப்ரியாயேசஸ் நேற்று திங்கட்கிழமை கூறும்போது, "உலகம் தற்போது எதிர்கொள்ளும் மிகப் பெரிய அச்சுறுத்தல் வைரஸ் அல்ல. ஒற்றுமையின்மை மற்றும் உலக அளவில் நிலவும் தலைமைப் பற்றாக் குறையே தற்போது நிலவும் அச்சுறுத்தல். பிளவுபட்ட உலகத்துடன் இந்தத் தொற்று நோயைத் தோற்கடிக்க முடியாது.

தொற்றுநோய் அதிகரித்து வருகிறது. இந்தத் தொற்று நோய் உடல்குறைபாட்டைவிட பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தப் பாதிப்பு தொடரும்" என்று தெரிவித்துள்ளார். (ஞா)

## சட்டமா அதிபர்...

சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த தகவலை அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ஞா)

## இறக்...

உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட வகையில் மக்கள் மயப்பட்ட பொருளாதா ரத்திற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையை வெற்றிகொள்வது தொழிலதிபர்களுக்குள்ள தற்போதைய சவாலாகுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகளின் அபிவிருத்திக்கான அனைத்து அமைச்சுக்களையும் ஒன்றிணைத்த வகையில் உருவாக்கப்பட்டுள்ள செயலணி மற்றும் பல்துறைசார் தொழிலதிபர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் நுகர்வுத் தேவையை பூரணப்படுத்தல், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குவதுடன், நாட்டிற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் போன்ற வர்த்தகர்களினால் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (ஞா)

























# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தயார்



## ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**இலங்கையில் யுத்தத்தால் நலிவடைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மக்களின் நல்லிணக்கம் சார்ந்த இணக்கப்பாட்டு வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள தாம் எப்போதும் தயாராக உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்தார்.**

வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சைக் கிராமத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் வீ எபக்ட் நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார மேம்பாட்டு வேலைத் திட்டங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டெனிஸ் சைபி நேற்று திங்கட்கிழமை சென்று பார்வையிட்டதுடன் அக் கிராம மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இதில், வீ எபக்ட் (We Effect) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளரும் வதிவிடப் பிரதிநிதியுமான ரீ. மயூரன், காவியா பெண்கள் அமைப்பின் காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யோகமலர் அஜித்குமார், வீ எபக்ட் (We Effect) நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் பிரியந்த ஜெயக்கொடி மற்றும் காவியா அமைப்பின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கடந்த 2018ம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் வீ எபக்ட் நிறுவனம் ஊடாக காவியா பெண்கள் அமைப்பினால் மேற்படி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபி இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"இங்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் வீ எபக்ட் நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இந்த வேலைத் திட்டங்களுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகின்றது.

மட்டக்களப்பில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை வலுப்படுத்தும் திட்டங்கள் சிறந்த முறையில் உள்ளது. இதனை பார்க்கும்போது மகிழ்ச்சியளிக்கின்றது.

இலங்கையில் யுத்தத்தால் நலிவடைந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், மக்களின் நல்லிணக்கம் சார்ந்த இணக்கப்பாட்டு வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள தாம் எப்போதும் தயாராக உள்ளோம்." என தெரிவித்தார். (ஞா)

# தென்னையுடன் மோதி ஹயஸ் வான் விபத்து

## நீர்வேலியில் சம்பவம்

(அச்சுவேலி)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்த ஹயஸ் வானின், ரயர் வெடித்ததை அடுத்து, அந்த வான் வீதியை விட்டு விலகி, தென்னை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில், வான் கடுமையாக சேதமடைந்துள்ளபோதும், வானில் பயணித்தவர்கள் காயங்கள் இன்றி தப்பியுள்ளனர். (ஞா-21)

# குடிமக்கள் யாரும் முகக்கவசம் அணியவில்லை கள்ளுத் தவறணைக்குச் சீல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் இயங்கி வந்த கள்ளுத் தவறணை சுகாதார வைத்திய அதிகாரியினால் 14 நாட்களிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மது விற்குமிடங்களில் வைத்து மது அருந்த தற்போதைய சூழ்நிலையில் அனுமதியில்லாத நிலையில், குறித்த கள்ளுத் தவறணையில் ஏராளமானவர்கள் கூடி கள் அருந்திக் கொண்டிருந்தனர்.

குடிமக்கள் யாரும் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. சக இடைவெளி பேணப்பட்டிருக்கவில்லை.

தகவலறிந்த காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் அங்கு சென்று சோதனையிட்ட போது, பல முதியவர்கள் இருமல், சளி மற்றும் சுவாச நோய்களுடன் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, கள்ளுத் தவறணை சீல் வைக்கப்பட்டது. அத்துடன், கிருமி நீக்கம் செய்யப்பட்டு, 14 நாட்களின் பின்னரே மீளத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஞா)

தேவை

கறிவாழைக் குலை தேவை.
( மொந்தன் )

தொடர்பு
076 937 5167
075 086 6867

கண்ணீர்க் காணிக்கை

அமரர்
விக்கினேஸ்வரன்
இராசநாயகி

பிறப்பு 19.02.1950
இறப்பு 22.06.2020



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் பொருளாளரும் தற்போதைய நிர்வாக உறுப்பினருமாகிய திரு. இரத்தினம் இராசசேகரம் அவர்களின் அன்புச் சகோதரி
அமரர் விக்கினேஸ்வரன் இராசநாயகி
அவர்கள் நேற்று (22.06.2020) திங்கட்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா முருகப்பெருமானின் திருவடிகளைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (3085)

தர்மகர்த்தா சபை - மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்

வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பஸ் தரிப்பிடத்தை அண்டிய பகுதியில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய அலுவலக பாவனைக்கு உகந்த வீடு வாடகைக்கு விடப்படும்.

TP:- 076 396 0034

இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்
யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, மருதங்கேணி, சாவகச்சேரி, மானிப்பாய், கிளிநொச்சி, கொடிகாமம், சுன்னாகம், பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை



(C-9624)

V2 TRAVELS 0768227499

காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

கணிதபாட வகுப்பு

தரம் 6-10 வரையான மாணவர்களுக்கு கணித பாடம், தேசிய பாடசாலை ஆசிரியரினால் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

பாடத்தில் பின்தங்கியவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

077 033 1156

வேலையாட்கள் தேவை

1. சுத்திகரிப்பு பணியாளர்
➢ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
➢ வைத்தியசாலையில் சுத்திகரிப்பு மற்றும் நோயாளர் பராமரிப்பில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2. சமையல் உதவியாளர்
➢ 15றுக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கான சமையல் முன் அனுபவம்.

(C-9745)

தொடர்பு: Institute of Medical Sciences Trust
Green Memorial Hospital, Manipay.
Email : theimsjaffna@gmail.com / website : www.imslanka.lk
Tel : 077 542 8931 / 076 016 3515 / (021) 225 6335 / (021) 225 6990

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.